Registered as a NewsPaper

22 JAN 2005

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-09 22-01-2005 சனிக்கிழமை ஓசை -339



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11118)

# தாயகம் திரும்பிய அன்ரன் பாலசிங்கம்

# தேசியத் தலைவருடன் மந்திராலோசனை!

## நோர்வே வெளிவிவகார அமைச்சருடனான இன்றைய சந்திப்புக் குறித்து பரிசீலனை

(கிளிநொச்சி)

**நேற்றுப் பிற்பகலில் தாயகம் திரும்பிய அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து மந்திராலோசனை நடத்தினார். இதில் இன்று நடைபெறவுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்புத் தொடர்பாகத் தீவிர ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.**

கிளிநொச்சி வந்து சேர்ந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்று மாலையே தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில், சுனாமிப் பேரலைகளினால் தமிழர் தாயகப் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தம், தற்போதைய நிவாரணப் பணிகளின் நிலை என்பன குறித்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தற்

(12ஆம் பக்கம் பார்க்க)





## பொதுவானதொரு கட்டமைப்பு ஊடாக உதவிகளைப் பகிர்ந்தளிக்கக் கோருவோம்!

### அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்



(அலுவலக செய்தியாளர்)

தமிழர்களின் நிலைமை நெருக்கடி மிக்கது. மிகப் பெரிய சர்வதேச உதவி சுனாமி அனர்த்தத்திற்குக் கிடைத்துள்ளது. ஆனால், சமனான விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு பொதுவான கட்டமைப்பினூடாக இவ்விநியோகம் மேற்கொள்ளப்படவேண்டும் என நோர்வே பிரதிநிதிகளுடன் நாம் கலந்து பேசவேண்டியுள்ளது என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

நேற்று லண்டனிலிருந்து கிளிநொச்சி வந்தடைந்தவேளை செய்தியாளர்களிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)



## சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பாகுபாடு தற்பொழுதும் தொடர்கின்றது

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகப்பகுதியினை அரசு திட்டமிட்டு பாகுபாடு காட்டி புறக்கணித்து வருகின்றது. அந்த அடிப்படையிலேயே அதனுடைய தொடர் நடவடிக்கைகள் தற்போதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இவ்வாறு நேற்றுப் பிற் பகல் கிளிநொச்சியில் அமைந் துள்ள விடுதலைப்புலிகளின் திட்ட மிடல் செயலகத்தில் இடம் பெற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பினையடுத்து செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

அவர் வழங்கிய செவ்வி வருமாறு;

* கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போது பேசப்பட்ட விடயங்கள் குறித்துத் தெரிவிப்பீர்களா?

இன்றைய சந்திப்பு முக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்த உதவி நிதி குறித்த தகவல்களை அரசாங்கம் வெளிப்படுத்துவது அவசியம்

### -த.பு.கழகம் வெளியிட்டுவிட்டதென ரான்ஸ்பரன்சி இன்ரநசனல் அறிவிப்பு

அரசாங்கமும் அரச சார்பற்ற அமைப்புகளும் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கிடைத்த, கிடைக்கப்போகின்ற நிதிகள் தொடர்பில் தகவல்களை வெளியிட வேண்டும் என ரான்ஸ்பரன்சி இன்ரநசனல் அமைப்புக் கோரியுள்ளது. இது தொடர்பில் கருத்துரைக்கும் ரான்ஸ்பரன்சி இன்ரநசனலின் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே சி வெலியமுன தமிழர் புனர்வாழ்வு அமைப்பு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தமக்குக் கிடைத்துள்ள நிதிகள் தொடர்பில் தகவல்களை வெளியிட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் புனர் அமைப்பு நடவடிக்கைகளின் மீது நம்பிக்கைளை ஏற்படுத்தும் செயற்பாடாகும்.

இந்த நிலையில் அரசாங்கமும், அரசசார்பற்ற அமைப்புகளும் தமது தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். அரசாங்கத்தின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் வித்துடல் விதைப்பும்

கடந்த 26.11.2004 இயற்கையனர்த்தத்தின்போது சாவடைந்த தமிழீழத் தேசியத்துணைப்படை வீரர் லெப்டினன்ட் சுந்தரமூர்த்தி (முத்தையா - சுந்தரமூர்த்தி, கண்டி, த.மு :- விசுவமடு குளத்தடி, பாரதிபுரம்) என்பவரது வித்துடல் நேற்று விதைக்கப்பட்டது.

வித்துடல் அவரது இல்லத்தில் இருந்து எடுக்கப்பட்டு வீரவணக்க நிகழ்வு விசுவமடு மாவீரர் மண்டபத்தில் வர்த்தக சங்கத் தலைவர் ஞானம் தலைமையில் நடைபெற்றது. ஈகச்சுடரினை அவரது துணைவியார் ஏற்றி வைத்தார். வீரவணக்க உரையை விசுவமடு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ரூபன் நிகழ்த்தினார். தொடர்ந்து வித்துடல் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

## வரிவிளம்பரம்

**காணி**

**விற்பனைக்குண்டு**

புதுக்குடியிருப்பு, 02 ஆம் வட்டாரத்தில் 01 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- குணம் தேநீர்க்கடை, தீன்சுவை அருகாமை, முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு. (5097)

## புலமைப்பரிசில் பரீட்சை

ஏசியன் கொம்பியூட்டர்ஸ் வழங்கும் கணினிக் கற்கை நெறிக்கான மெகா புலமைப்பரிசில் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான இலவச அனுமதிகளை யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சியில் (கணினியியல் கல்லூரி) அமைந்துள்ள ஏசியன் பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை அனுமதி அட்டைகளை பெறாதவர்கள் பரீட்சை நிலையங்களில் ஞாயிறு காலை 9 மணி முதல் பெற்றுக்கொள்ள முடியும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

### முன்னோடித் தேர்வு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் சைவநெறித் தேர்வு-2005 இற்கான இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கான முன்னோடித் தேர்வு எதிர்வரும் 12.03.2005 நடைபெறவுள்ளது.

எனவே அதற்குரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 31.01.2005 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேர்வுச் செயலர் வ.கந்தசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

## பகிரங்க ஏல விற்பனை

கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்தல் விதிகளுக்கமைவாக முழங்காவில் பிரதேசத்தில் பயிரழிவுகளையும் வீதி விபத்துக்களையும் உண்டுபண்ணிய 04 கால்நடைகள் கடந்த 10 நாட்களாக உரிமை கோரப்படாத நிலையில் உள்ளன. எனவே இக்கால்நடைகள் யாவும் எதிர்வரும் 26.01.2005 திகதிக்கு முன் உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில் அதே திகதி காலை 10.00 மணிக்கு மு/வேராவில் கமக்கார அமைப்பு பொதுப்பட்டியில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகிறோம்.

*கால் நடைகள் விபரம்*

| இல | குறி | நிறம் | இனம் |
|---|---|---|---|
| 01 | P.S | கறுப்பு பூச்சி | பசு |
| 02 | S.A | கறுப்புசுட்டி | பசு |
| 03 | S.A | செங்காரி புள்ளி | பசு |
| 04 | - | செங்காரி | நாம்பன் |

**இவ்வண்ணம்**
**த.பொ.மே.நிறுவனம்**
**கிளி.மாவட்டம்**

(5585)

## சாவு அறிவித்தல்

**சரவணபவானந்தன் இராஜேஸ்வரி**

அக்கராயன் ம.வி. ஆசிரியர் திரு.சரவணபவானந்தன் (கண்ணன் மாஸ்ரர்) அவர்களின் மனைவி இராஜேஸ்வரி அவர்கள் 20.01.2005 அன்று காலமாகி விட்டார். திருமகள், திருக்குமரன், திருவேணி, கலைமகள் (லண்டன்), கமலவண்ணன் ஆகியோரின் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2005 சனிக்கிழமை இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள (உரும்பிராய் கிழக்கு உரும்பிராய்) இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் உரும்பிராய் பொதுமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-**
**த.சரவணபவானந்தன்**
**(கணவர்)**
**அக்கராயன் ம.வி,**
**கிளிநொச்சி.**

(5586)

## கலை நிலா கல்வி நிலையம்

கண்டி வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. மத்தியகல்லூரிஅருகில்

**2007 A/L**

கணித-உயிரியல் பிரிவு (9 மணி)

O/L எடுத்த மாணவர்களிற்கான
**SPOKEN ENGLISH**
(03 மாதம்) (10• மணி)
ஆரம்பம்:-23-01.2005
தொழில் புரிவோருக்கு விசேட பிரிவு

(5096)

**தமிழீழ மாணவர் அமைப்பும் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் இணைந்து நடாத்தும்**

**லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இலவச மழலைகள் கணினி பூங்கா**

## முகாமையாளருக்கான பதவி வெற்றிடம்

தகைமைகள்:-

1. A/L சித்தியடைந்தவர்கள் இருபாலாரும்.
2. O/L ஆங்கிலத்தில் சித்தி
3. அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனத்தில் M.S OFFICE பாட நெறியை பூர்த்தி செய்தல்.
4. அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்.
5. ஏனைய தகைமைகள் கருத்தில் கொள்ளப்படும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சுயவிபரக் கோவையுடன் 05.02.2005 இற்கு முன்பாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்,
இலவச மழலைகள் கணினிப் பூங்கா,
பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.

குறிப்பு:-புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 08.02.2005 இற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

(5584) **நிர்வாகம்**

# நீங்காத நினைவில்...



பிரான்சிஸ் சவரி செல்வராஜேஸ்வரி
தாயின் மடியில்
23-07-1951



சந்திரசேகரன் மேரி அகிலா
தாயின் மடியில்
14-02-1980



சந்திரசேகரன் அனோஜா
தாயின் மடியில்
07-12-1997



சந்திரசேகரன் அரோதா
தாயின் மடியில்
10-12-2004

**இறைவனின் கரத்தில்:- 26-12-2004**

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

ஆழிப் பேரலையின் கோரத்தாண்டவத்தால் செல்வபுரம் முல்லைத்தீவுப் பகுதியில் அகாலச் சாவடைந்த எமது அம்மா, சகோதரி, பிள்ளைகளின் பிரிவுச் செய்தி அறிந்து எமது துயரத்தில் பங்கு கொண்டு எம்மை ஆறுதல்படுத்தி இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது கண்ணீரோடு கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 25.01.2005 அன்று மூங்கிலாறு உடையார்கட்டில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(சி-11213)

# பாக்தாத் பள்ளிவாசலில் குண்டுத் தாக்குதல்

## 14 ஷியா முஸ்லிம்கள் பலி; 40 பேர் காயம்!



(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்றில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமடைந்தனர்.

பள்ளிவாசலில் தொழுகையில் ஷியா முஸ்லிம்கள் ஈடுபட்டிருந்த போதே இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பள்ளிவாசலுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் குண்டு வைக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. மேலும் குண்டுத் தாக்குதலால் பள்ளி வாசலுக்கும் சேதமேற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இதே வேளை பாக்தாத்தில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் அமெரிக்கப் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.



காசா முனைப் பகுதியிலிருந்து தற்காலிக முகாமை விட்டு வெளியேறும் இஸ்ரேலியப் படையினர்.

## சுனாமியால் உயிரிழந்தோர் 2.20 லட்சமாக உயர்வு!


கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் கொந்த ளிப்பால் இந்தோனேசியாவில் பேரழிவு ஏற்பட்டுள்ளது. அந்நாட்டில் மட்டும் சுனாமிக்கு பலியானோர் எண்ணிக்கை 1 இலட்சத்து 66 ஆயிரத்து 320 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் இந்தோனேசியா, இந்தியா, இலங்கை உட்பட ஆசியக் கண்டத்தில் சுனாமிக்குப் பலியானோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 20 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

# தீவிரவாதத்தை அடியோடு ஒழித்துக் கட்டி உலகில் அமைதி நிலவ அமெரிக்கா பாடுபடும்

பதவியேற்பு நிகழ்வில் சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்

(வோஷிங்டன்)

**உலகம் முழுவதும் அமைதி நிலவ அமெரிக்கா தொடர்ந்து பாடுபடும். தீவிரவாதத்தின் கொடூரத்தை உலக நாடுகள் உணர்ந்துள்ளன. எப்பாடு பட்டாவது தீவிரவாதத்தை அடியோடு ஒழித்துக் கட்டுவேன் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தமது பதவியேற்பு வைபவத்தில் தெரிவித்தார்.**



கடந்த நவம்பர் மாதம் நடந்த அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ்புஷ் வெற்றி பெற்று 2-ஆவது முறையாக சனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.ஜோர்ஜ் புஷ் 2ஆவது முறையாக பதவி ஏற்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. வெள்ளை மாளிகையில் இதற்கான கொண்டாட்டங்கள் நடந்தன. பாராளுமன்றக் கட்டடத்தில் நடந்த நிகழ்ச்சியில் ஜோர்ஜ்புஷ்சுக்கு சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி வில்லியம் ரெஸ்குயிஸ்ட் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

புஷ் பதவியேற்பு விழாவில் முன்னாள் சனாதிபதி கிளிண்டன்' 'புஷ்சின் தந்தை' ஜோர்ஜ் புஷ்சின் மனைவி லாரா அவரது 2ஆவது மகள் ஜென்னா பார்பரா உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ஜோர்ஜ் புஷ் அமெரிக்காவின் 55ஆவது சனாதிபதியா வார்.

2ஆவது முறையாக பதவி ஏற்ற ஜோர்ஜ் புஷ் பேசும்போது கூறியதாவது:- உலகம் முழுவதும் அமைதி நிலவ அமெரிக்கா தொடர்ந்து பாடுபடும் உலக வர்த்தக மைய கட்டடம் தாக்கப்பட்ட பிறகு தீவிரவாதத்தின் கொடூரத்தை உலக நாடுகள் உணர்ந்துள்ளன. எப்பாடுபட்டாவது தீவிரவாத்தை அடியோடு ஒழித்துக் கட்டுவேன். மற்ற நாடுகளின் கலாச்சாரம், உரிமைகளில் அமெரிக்கா ஒருபோதும் தலையிடாது ஈராக்கில் விரைவில் அமைதி நிலவும் அங்கு தேர்தல் நேர்மையாக நடக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

ஜோர்ஜ்புஷ் பதவியேற்ற பிறகு நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றினார்.

இந்த நிலையில் பதவியேற்பு நிகழ்ச்சி நடந்த இடத்துக்கு வெளியே புஷ்சுக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் நடந்தது. ஈராக் போர் மற்றும் பொருளாதார கொள்கை ஆகியவற்றில் புஷ்சைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# ஈராக் தீவிரவாதிகளால் எட்டுச் சீனர்கள் கைது



ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தினரையும் வெளிநாட்டுப் பயணிகளையும் தீவிரவாதிகள் கடத்திச் செல்வதும் பணயக் கைதிகளாக அவர்களை பிடித்து வைத்துக் கொண்டு கோரிக்கை நிறைவேற்றாத பட்சத்தில் தலையைத் துண்டித்து கொலை செய்வதும் வாடிக்கையாக நடந்து வரும் நிகழ்ச்சியாகி விட்டது.

இப்போது தீவிரவாதிகள் சீனாவைச் சேர்ந்த 8 பேரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றுள்ளனர்.

சீனாவைப் பொறுத்தவரை ஈராக் பிரச்சினையில் அதன் நிலை என்ன அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்படுகின்றதா என்பதை விளக்க வேண்டும். ஈராக்கில் இருந்து சீனர்கள் வெளியேற வேண்டும் என்று தீவிரவாதிகள் நிபந்தனை விடுத்து இருக்கிறார்கள்.

கடத்தப்பட்ட பணயக் கைதிகள் 8 பேரையும் வரிசையாக உட்கார வைத்து அவர்களது படங்களை வீடியோவில் தீவிரவாதிகள் காண்பித்துள்ளனர்.

# காஷ்மீரில் பூஞ்ச் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தவில்லை

இந்தியாவின் குற்றச்சாட்டு நிராகரிப்பு

(இஸ்லாமபாத்)

காஷ்மீர் எல்லையில் தாக்குதல் நடத்தியது பாகிஸ்தான் இராணுவம் அல்ல என்று அந்நாடு தெரிவித்துள்ளது.

காஷ்மீர் எல்லையில் உள்ள பூஞ்ச் பகுதியில் செவ்வாய்க் கிழமை இரவு பாகிஸ்தான் இராணுவம் பீரங்கியால் தாக்கியதாக இந்தியா செய்தி வெளியிட்டிருந்தது பதின்மூன்று மாதம் போர் நிறுத்தத்தை பாகிஸ்தான் இராணுவம் மீறியதாக இந்திய இராணுவத் தளபதி குற்றம் சாட்டி இருந்தார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி இந்திய இராணுவத் தளபதியுடன் நேற்று முன்தினம் தொலைபேசியில் பேசினார். "அப்போது காஷ்மீர் எல்லையில் பாக். இராணுவம் பீரங்கியால் சுடவில்லை. அதனால் இந்தியக் குற்றச்சாட்டை மறுக்கிறோம். முழு அளவில் விசாரணை நடத்தினோம். அப்போது பாக். சிப்பாய்கள் சுட்டதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை" என்று பாக். தளபதி கூறியதாக பாக். இராணுவ தகவல் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சுல்தான் தனியார் ஜியோ தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.



சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்தோனேசிய நகரான ரம்பங் நுசா வீதியில் வெள்ளத்தில் சிக்குண்ட வாகனம் ஒன்றைப் படகில் ஏற்றும் மக்கள்



ரஷ்யாவில் இப்போது கடும் குளிர் நிலவுகிறது. அங்குள்ள சில ஏரிகளில் தண்ணீர் ஐஸ்கட்டியாக உறைந்து காணப்படுகின்றது. ஆனால் இந்த குளிரையும் பொருட்படுத்தாமல் ரஷ்யர்கள் உடல் பாதுகாப்பு விழா கொண்டாடு கிறார்கள்.

'ஜில்' என்ற குளிர்ந்த நீரானது உடல் நலத்துக்கு நல்லது என்கிறார்கள் ரஷ்யர்கள். மொஸ் கோவில் ஒரு ஏரியில் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஒருவர் தனது 2 குழந்தைகளையும் குளிப்பாட்ட ஏரிக்குள் தூக்கிச் செல்ல குளிர் தாங்காமல் அந்தக் குழந்தைகள் கூச்சலிடும் காட்சி.

# கினியா சனாதிபதி லன்சானா கோன்டே கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பினார்!

(கான்க்ரே)

கினியா நாட்டு சனாதிபதி லன்சானா கோன்டே கொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பினார். மிகவும் வயதான இவர் உடல் நலம் குன்றிய நிலையில் இருக்கிறார்.

நேற்று முன்தினம் இவர் கான்க்ரே நகரில் காரில் பாதுகாப்பு படைவீரர்களுடன் சென்று கொண்டிருந்தார். அப்போது சில தீவிரவாதிகள் அவரது காரை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்பு படையினரும் திருப்பிச் சுட்டனர். இதில் சனாதிபதி காயம் இன்றி உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் பற்றி பாதுகாப்புத் துறை அமைச்சர் மூசா சம்பில் கூறுகையில் "சனாதிபதியைக் கொல்ல நடந்த முயற்சியை முறியடித்துவிட்டோம். சிலரைக் கைதுசெய்து விசாரித்து வருகிறோம்" என்றார்.

இந்த நிலையில் சனாதிபதி கோன்டே தொலைக்காட்சியில் தோன்றி, "நான் நலமாக இருக்கிறேன்" என்று நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

## பறவைக் காய்ச்சலால் வியட்நாமில் பெண் பலி!

வியட்நாம் நாட்டில் பறவை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிலர் ஹீஷிமின்கா நகரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களில் கடந்த வாரம் ஒரு பெண் இறந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் 21 வயது நிரம்பிய மற்றொரு பெண்ணும் இறந்து போனார்.இதனால் அங்கு பறவைக் காய்ச்சலுக்கு பலியானவர் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துவிட்டது. 42 வயது மதிக்கத்தக்க ஒருவர் இன்னும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

# முல்லையில் கடந்தமூன்று தினங்களாக நடைபெற்ற அவல நீக்க ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சி

(அலுவலக செய்தியாளர்)

**பாதிக்கப்பட்ட மக்களின் உளநலத்தைப் பேணும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் அவலநீக்க ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சி கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றுள்ளது.**

முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் பாதிப்புற்று நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் அவலங்களைப் போக்கி அவர்களின் உளநலத்தைத் பேணிக்கொள்ளும் நோக்குடன் மேற்படி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது.

இதில் கடந்த புதன்கிழமை தொடக்கம் நேற்று வரையான ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சியில் முல்லைத்தீவு வலய ஆசிரியர்களும், யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தெருவெளி அரங்க குழுவினரும் இணைந்து கருத்துக்களை வழங்கி வந்தனர் இவர்களுடன் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# அக்கரைப்பற்றில் முஸ்லிம் இளைஞர் கைது அவரது வீட்டிலிருந்து ஆயுதங்களும் மீட்பு

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் கடந்த புதன்கிழமை முஸ்லிம் இளைஞரொருவர் ஆயுதங்களுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தகவலொன்றின் பேரில் இவரது வீட்டைச் சோதனையிட்ட பொலிசார் ரி-56 ரக துப்பாக்கி-01 அதற்கான 2 மகசீன்கள், கைக் குண்டு-01 மற்றும் கத்தி-01 ஆகியவற்றுடன் கையுறைகள் சிலவற்றையும் கண்டு பிடித்துள்ளனர்.

இந் நபருடன் [illegible]டைய மற்றுமொருவர் தலைமறைவாகி யுள்ளதாக அக்கரைப்ப[illegible]ாலிசார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட இளைஞர் அக்கரைப்பற்று நீதவான் முன்நிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# தமிழீழ வைப்பகத்தின் மாங்குளம் கிளையின் சிறார் உண்டியல் பரிசளிப்பு நிகழ்வு

தமிழீழ வைப்பகம் மாங்குளம் ஊரகக் கிளையின் சிறார் உண்டியல் பரிசளிப்பு நிகழ்வு 2005 கடந்த புதன்கிழமை பிற்பகல் 3.15 மணியளவில் நடைபெற்றது. மேற்படி கிளையின் மேலாளர் அ. யுயுதானன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மங்கல விளக்கினை துணுக்காய்



பிரதேச சபை செயலர் திருமதி கோமளவல்லி தமிழ்ச்செல்வன், மல்லாவி வர்த்தகர் சங்கத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றினர்.

வரவேற்புரையை உதவி மேலாளர் பகீரதன் நிகழ்த்தினார். சிறப்புரையினை தமிழீழ வைப்பக ஆளுகை அலுவலர் து.ரங்கநாதன் நிகழ்த்தினார். சிறார்களுக் கான பரிசில்களை திருமதி. கோமளவல்லி வழங்கிச் சிறப்பித்தார். மேற்படி கிளைஅலுவலர் பொ.கமல் நன்றியுரை வழங்கினார். (சோ)


# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் உளநலத்தைப் பாதுகாக்க பயிற்சிச் செயலமர்வு

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மாணவர்களின் உளநலத்தைப் பாதுகாத்துப் பேணும் நோக்குடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர், உளவளத்துணையாளர் மற்றும் நட்புறவாளர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் கடந்த புதன் கிழமைஆரம்பமாகியுள்ளது. இது 28.01.2005 வரை நடத்தப் படவுள்ளன.

வடமராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, பட்டிருப்பு, கல்குடா ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 24 பிரிவுகளில் இச்செயலமர்வுகள் நடைபெறவுள்ளன. இச்செயலமர்வுக்கான முன்னோடிப் பயிற்சி நெறி கடந்த 12.01.2005 முதல் 15.01.2005 வரை யாழ்ப்பாணம் "சாந்திகத்தில்" பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களினால் ஜேர்மனியிலிருந்து வந்திருந்த உளவள நிபுணர்களின் துணையுடன் நடத்தப்பட்டது.

ஜீரிஇசற்/பீகெயர் நிறுவனம் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் நடத்தும் இச்செயலமர்வு[illegible]ளுக்கான ஏற்பாடுகளை ஜீரிஇசற்/பீகெயர் நிறுவனத்தின் வவுனியா தொழில்நுட்ப ஆலோசகர் சுந்தரம் திவகலாலா அவர்களும் தேசிய கல்வி நிறுவக தமிழ்த்துறைப் பணிப்பாளர் தை.தனராஜ் அவர்களும் கூட்டாக மேற்கொண்டுள்ளனர். ஜீரிஇசற்/பீகெயர் நிறுவனம் இதுவரை வடக்கு கிழக்கு மாகாணத்தில் சுமார் 90 உளவளத் துணையாளர்களுக்கும் ஆயிரம் நட்புறவாளர்களுக்கும் பயிற்சி அளித்துள்ளதென்பதும் இவர்கள் போரினால் பாதிக்கப் பட்ட மாணவர்களின் உளநலத் தைப் பேணி அவர்களை ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீர்ப் திட்டத்தினால் மல்லாவி நகர்ப்பகுதிக்கான குடிநீர் விநியோகத்திற்கான குடி நீர்க் கிணறு நீர்த் தாங்கி என்பன நீர் மாணிக்கப்பட்டுள்ளன. மிக விரைவில்மல்லாவி நகருக்கான குடிநீர் விநியோகம் இடம் பெறவுள்ளது என துணுக்காய் பிரதேசசபையின் விசேட ஆணையாளர் விக்ரர் ஜெயசிங்கம் தெரிவிக்கின்றார். (24)



# சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக வற்றாப்பளையில் பிரார்த்தனை

(முல்லைத்தீவு)

கடந்த 26 ஆம் திகதி சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக உயிர் இழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட பிரார்த்தனை ஒன்று இடம்பெற இருப்பதாக பரிபாலனசபை தெரிவிக்கின்றது.

24.01.2005 அன்று இரவு அந்தியேட்டிக் கிரிகைகளும், 25.01.2005 செவ்வாய்க்கிழமை பகல் ஆத்ம பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் சுனாமியால் இறந்தவர்களின் உரித்துடையவர்கள் 24.01.2005 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு முன்னர் வற்றாப் பளை கண்ணகி அம்மன்ஆலய வளாகத்திற்கு சமுகம் தருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (21,20)

## -அகதிகளின் வீட்டுத்திட்ட வேலைகளுக்கு- பணியாளர்களைக் கொடுத்துதவும் கனேடிய நிறுவனம்

(அலுவலக செய்தியாளர்)

உலக கனேடிய பல்கலைக் கழக நிறுவனத்தின் முல்லைத்தீவுப் பகுதியில் தற்காலிகமாக, அவசரமாக அமைக்கப்பட்டுவரும் வீட்டுத் திட்டங்களுக்கான வேலைகளை துரிதப்படுத்த அந்நிறுவனம் தேவையான தொழிலாளர்களை வழங்கி வருகின்றது.

முல்லைத்தீவு உண்ணாப்புலவு பகுதியில் தற்காலிகமாக ஓர் இடத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. இந்த நிறுவனம் தம்மிடம் உள்ள திறன்சார்ந்த பணியாட்களை சகல வேலைகளுக்கும் வழங்கி வருகின்றது.

இவற்றில் பயிற்சிபெற்ற தச்சு வேலையாளர்கள், மேசன் வேலையாட்கள், நீர்க்குழாய் பொருத்துனர், மின் ஒட்டு, வீட்டு மின் இணைப்பாளர் போன்ற தொழிலாளர்களை வழங்கி வருகின்றது. இதில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்கின்றனர். இவற்றில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களே தற்சமயம் கடமையில் உள்ளனர். (கு)

# கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தில் காலை 10.00 மணியளவில் மன்னாரிலுள்ள 39 விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகளுக்கான ஒரு கலந்துரையாடல் அண்மையில் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடல் மன்னார் நகரப் பிரதேச செயலாளர் R.வரதீஸ்வரன் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுக்கள் பற்றி புதிதாக விளையாட்டரங்குகள் செய்தல் தற்சமயம் 15 விளையாட்டரங்குகள் திருத்தம் செய்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. பிரதேச செயலாளரால் விளையாட்டுக்கழகங்களுக்கு இவ்வாண்டுக்கான விளையாட்டு உபகரணங்கள் முக்கியமாக உதைப்பந்துக்கான பந்துகள், வலைப்பந்துக்கான வலைகள் கிரிக்கெட் விளையாட்டுக்கான உபகரணங்கள் போன்றன வழங்கப் பட்டன. (18)

# புதுக்குடியிருப்பில் மருந்தகம் தீப்பிடித்து எரிந்தது

புதுக்குடியிருப்பில் ஓர் மருந்தகம் தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது கடந்த செவ்வாய்க் கிழமை இரவு புது-முல்லை வீதியில் அமைந்துள்ள மருந்தகத்தை உரிமையாளர் பூட்டி விட்டு பக்கத்தில் உள்ள வீட்டில் இருந்தார். 10.00 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் திடீரெனக் கடை எரிகிறது எனக் கேட்ட ஓலத்தையடுத்து சென்று பார்க்க மருந்தகத்தின் பின்பக்கம் களஞ்சியப் பகுதி தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்ததாகவும், அயலவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டு ஒரு பகுதியை காப்பாற்ற முடிந்தது எனவும் குறிப்பிட்ட உரிமையாளர் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்பு காவல் பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (8)

# முல்லை மாவட்ட அரச அதிபரின் மாதாந்தக் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் மாதாந்த கலந்துரையாடல்கள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன. அவையாவும் கீழ்க்காணும் திகதிகளில் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும் என அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் அறிவித்துள்ளார். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் 25.01.2005 முற்பகல் 10.00 மணிக்கும் , அவசரகால புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NEERP)அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கும், உலக உணவுத் திட்டக் கூட்டம் அன்றைய தினம் முற்பகல் 12.00 மணிக்கும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அன்றைய தினம் பிற்பகல் 1.30மணிக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அன்றை தினம் பிற்பகல் 3.00 மணிக்கும், சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் அன்றைய தினம் பிற்பகல் 4.00 மணிக்கும், அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் 26.01.2005 முறபகல் 10.30 மணிக்கும்,NEHARP திட்டக் கூட்டம் 26.01.2005 பிற்பகல் 1.30 மணிக்கும் நடைபெறும் எனத் தொிவித்துள்ளார். (கு,20)

# மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன மன்னார் மாவட்ட அலுவலகம் திறப்பு

மன்னார் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் மன்னார் மாவட்ட அலுவலகம் எருக்கலம்பிட்டி கமநல நிலையத்தில் திறந்து வைக்கப் படவுள்ளது. இதன் முகாமையாளராக ஏ.சந்திரமோகன் அவர்கள் நியமனம் பெற்றுள்ளார். இவ்வாண்டு125 ஏக்கர் நிலத்தில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளதெனவும் மேற்படி மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினர் ஒரு ஏக்கருக்கு 9 ஆயிரத்து 500 ரூபா மானியமாக வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மானியம் 50 ஏக்கருக்கு மட்டும் வழங்கப்படுமெனவும், தெரிவு செய்யப்பட்ட பசளைகள்,கிருமி நாசினிகள் போன்றனவும் வழங்கப்படுமென முற்குறிப்பிட்டு தேவையானோர் எருக்கலம்பிட்டி கமநல சேவைகளின் நிலையத்தில் இயங்கும் மேற்படி மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பம் செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (18)

# இராணுவ வாகனம் மோதி பலியானவரின் குடும்பத்தினருக்கு படையினர் அச்சுறுத்தல்!

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(தென்மராட்சி)

**மிருசுவில் பழைய வாய்க்கால் சந்திப் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி சிறிலங்கா இராணுவ வாகனம் மோதி பலியானவரின் குடும்பத்தினர் மீது சிறிலங்காப் படையினர் அச்சுறுத்தல் விடுத்து வருவதாகத் தெரியவருகிறது.**

மேற்படி சம்பவத்தில் பலியான வயிரவன் நடேசன் என்பவரின் வீட்டுக்கு வந்த சிறிலங்காப் படையினர் குடும்பத்திலுள்ளவர்களை அச்சுறுத்திச் சென்றுள்ளனர். விடுதலைப்புலிகள் யாரேனும் வீட்டுக்கு வந்தால் தங்களிடம் கட்டாயம் தெரிவிக்க வேண்டும் என்றும் படையினர் கூறிச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் இந்தப் பிரச்சினையை பெரிதாக்காமல் விட்டால் தாங்கள் உதவி செய்வதாகவும் தங்களுக்கு எதிராக பிரச்சினை செய்ய முற்பட்டால் பிறகு தாங்கள் கவனித்துக் கொள்வதாகவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காப் படையினரின் மேற்படி அச்சுறுத்தல் குறித்து அச்சம் அடைந்துள்ள இறந்தவரின் குடும்பத்தினர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜிடமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, பலியான வயிரவன் நடேசன்என்பவர் மிருசுவிலில், படையினர் நடத்திய வெறியாட்டத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளில் ஒருவர் என்பதும் மற்றும் மிருசுவிலில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களில் இவருடைய மகனும் மருமகனும் அடங்குவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராணுவ வாகனம் மோதி வயிரவன் நடேசன் பலியான வேளை அச்சம்பவத்தை மூடி மறைக்க படையினர் முற்பட்டதும் அதற்கு உடந்தையாக சிறிலங்காப் பொலிசார் செயற்பட்டதும் தெரிந்ததே. (28)

## பேருந்துத் தரிப்பிடம் வேண்டும்

(கிளிநொச்சி)

அக்கராயன், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான் பகுதிகளில் பேருந்துத் தரிப்பிடம் இன்மையால் பொதுமக்கள் பலத்த இடரினை எதிர்நோக்கி வருகின்றனர்.

பிரதான வீதிக்கு அருகில் உள்ள மரங்களின் கீழும் வாணிப நிலையங்களின் முன்னாலும் பொதுமக்கள் பேருந்துகளிற்காக காத்து நிற்கின்றனர். (15)

## யாழ். இல் களவாக மின்சாரம் பெற்ற பதின் மூன்று பேர் பொலிசாரால் கைது!

(நல்லூர்)

களவாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் ஒரு நாளில் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாகப் பெற்றுள்ளது.

கடந்தபுதன்கிழமை சுன்னாகம் மின்சாரசபை ஊழியர்கள் இளவாலைப் பகுதியில் உள்ள சிறிலங்காப் பொலிசாருடன் இணைந்து களவாக மின்சாரம் பெறுபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அளவெட்டி, இளவாலைப் பகுதிகளில் இத்திடீர் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது 13 பேர் களவாக மின்சாரம் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டு இளவாலைப் பகுதிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது 13 பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தலா 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. (41)

# 200 முதல் 400 மீற்றர் தூரத்திற்கு அப்பால் கரையோரங்களில் மீளக் குடியமர அனுமதி

### -சுனாமி நிவாரணபுனர்வாழ்வு ஒருங்கிணைப்பு செயலகம் தகவல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தும் போது கடற் கரையோரத்தில் இருந்து 200 தொடக்கம் 400 மீற்றர் தூரத்திற்கு அப்பாலேயே குடியிருப்புக்கள் அமைக்க அனுமதி வழங்கப்படுமென சுனாமி நிவாரண, புனர்வாழ்வு ஒருங்கிணைப்புச் செயலகம் தெரிவித்திருக்கிறது.

மீண்டும் ஒரு கடல் அனர்த்தம் ஏற்பட்டால் உருவாகக்கூடிய உயிர் மற்றும் உடமை இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்குடனேயே இதுகுறித்து தாம் கவனம் செலுத்தவுள்ளதாக மேற்படி செயலகத்தின் ஊடகப் பேச்சாளர் இமையவன் தெரிவித்தார். இந்நடை முறைகளுக்கமையவே சுனாமி அனர்த்தத்தால் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த் வடிக்கைகளை சுனாமி நி ர, புனர்வாழ்வு ஒருங்கிணைப்புச் செயலணி மேற்கொண்டு வருவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (33)

## நிவாரண வழங்கலில் குறைபாடுகள் குறித்து முறையிடப் பருத்தித்துறையில் கருமபீடம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்த நிவாரணம் வழங்கலில் ஏற்படுகின்ற குறைபாடுகள் பற்றிக் கண்காணித்து நடவடிக்கைகளை எடுப்பதற்கென பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் விசேட கருமபீடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கருமபீடத்தில் சுனாமி அனர்த்தத்தினால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் பற் றிய குறைபாடுகள்பற்றி முறையிடலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (33)

### தொண்டமானாறு முதல் சுண்டிக்குளம் வரை

## கரையோரத்திலுள்ள 16 பாடசாலைகளை வேறு இடங்களிற்கு மாற்றத் தீர்மானம்

(வடமராட்சி)

சுனாமி கடற் கொந்தளிப்பினை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வடமராட்சியின் கரையோரப் பகுதிகளிலுள்ள பல பாடசாலைகளை வேறிடங்களிற்கு இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடமராட்சியின் தொண்டமானாறு முதல் சுண்டிக்குளம் வரையிலான கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள 16 பாடசாலைகளே இவ்வாறு முதலில் இடமாற்றம் செய்யப்படவுள்ளன.

கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரப்பகுதியினுள் அமைந்துள்ள இப்பாடசாலைகளே முதலில் இடமாற்றம் செய்யப்படவுள்ளன. கடந்த புதன் கிழமையன்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற "சுனாமி" கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான புனர்நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம், பா.ஈழவேந்தன், ஆகியோரும் விடுதலைப்புலிகளின் தமிழீழ நிர்வாக சேவையின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் க.விஜிதரன் யாழ். மாவட்ட சிறிலங்காப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களது தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை மேற்படி 16 பாடசாலைகளையும் கரையோரப் பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள பகுதிகளிற்கு நகர்த்தி நிர்மாணிப்பதற்கான உதவிகளை வழங்க சுவிஸ் ஒத்துழைப்பு அமைப்பு (SDC), யுனிசெப் மற்றும் ஜி.ரி.இஸட் எனப்படும் ஜேர்மனிய தொண்டமைப்பு என்பன முன்வந்துள்ளன (27)

# சுனாமி அனர்த்தத்தினால் 41 முன்பள்ளிகள் பாதிப்பு அரச,அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும்

### ஆரம்பப் பிள்ளைப்பருவ உதவிக் கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

(வடமராட்சி)

தொண்டமானாறு தொடக்கம் கப்புது வரைக்கும், மருதங்கேணி தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் சுனாமி அனர்த்தத்தினால் 21 முன்பள்ளிகள் இயங்க முடியாத நிலையில் சேதமடைந்துள்ளன. இதில் ஏறத்தாழ 700 முன்பள்ளி மாணவர்கள் கல்வி பயின்றதுடன் 38 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மேலும் பருத்தித்துறைப் பிரதேசத்தில் கடற் றொழிலையும் கடலோடு கூடிய உபதொழிலையும் மேற்கொள்கின்ற பிரதேசத்தில் 11 முன்பள்ளிகள் உள்ளதுடன் 350 மாணவர்களும், 21 ஆசிரியர்களும் தமது கடமைகளில் ஈடுபடுகின்றனர். கரவெட்டிப் பிரதேசத்தில் கடல் வளத்தை நம்பிவாழும் பிள்ளைகளைக் கொண்டு இயங்கும் முன்பள்ளிகளாக 9 முன்பள்ளிகள் காணப்படுவதுடன் 200 மாணவர்கள் கல்வி பயில்வதுடன், 15 ஆசிரியர்கள் இதில் ஈடுபடுகின்றனர்.

மேலும் வடமராட்சி கிழக்கிலும் 20 முள்பள்ளிகளும், 30 ஆசிரியர்களும் கடமையில் ஈடுபடுகின்றனர். பாதிக்கப்பட்ட முன்பள்ளி விபரங்களை அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஆரம்பப் பிள்ளைப்பருவ உதவிக்கல்விப் பணிப்பாளர் கொடுத்துள்ளார் மேலும் அவர் தெரிவிக்கையில்.

தற்போது சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்ப அங்கத்தவர்களிடமிருந்தே ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் தற்போது மக்கள் தமது சொத்துக்களை இழந்துகாணப்படுவதால் அவர்களிடமிருந்து வேண்டப்படும் பணத்தை இவ்ஆசிரியர்கள் வேண்ட முடியாதுள்ளது. இளமைக் கல்வியே சிலையில் எழுத்தாக அமைந்துள்ளது. ஆகையால் ஏறத்தாழ 1500 மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு 100 ஆசிரியர்களுக்கான வேதனங்களை தந்து கல்வியைச் சீராக நடைமுறைப்படுத்த உதவுமாறும் கேட்டுக் கொண்டார்.

இதேநேரம் சந்நிதியான் ஆச்சிரமம் மற்றும் இது போன்ற அமைப்புக்களினால் பள்ளி மாணவர்களுக்கான போசாக்கு உணவுகளை 75 பாடசாலைகளுக்கு வழங்கி வருகின்றது. இவ்வாறு இருந்த போதும் இவ் உணவுகளை எடுத்து வருவதற்கான போக்கு வரத்துக்களும் கடினமான முறையில் உள்ளது.

மேலும் தற்போது அமைக்கப்படவுள்ள இடைத்தங்கல் முகாம்களில் அமைக்கப்படவிருக்கின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளையும் வழங்க முடியாதுள்ளது.


கடந்த காலத்தில் தென்மராட்சிப் பகுதி மக்களின் இடப்பெயர்வின் போது வடமராட்சியில் காண்பப்பட்ட முன்பள்ளிகளில் பாதிக்கப்பட்ட ஆசிரிய மாணவர்களை இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் அவர்களுக்கான 9 மாதகால ஊதியமாக 65 ஆசிரியர்களுக்கும் யுனிசெப் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது ஆகையினால் வேறு நிறுவனங்களும் இது போன்ற உதவிகளைச் செய்து சிறார்களின் விருத்திகளில் பங்கெடுத்து அவர்களின் எதிர்காலத்திற்கான திடமான அத்திவாரங்களை இடுவதற்கான உதவிகளைச் செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். (கா)

## அதிபர் ஒருவருடன் இயங்கும் தவசிகுளம் றோ. க. அ. த. க. பாடசாலை


கொடிகாமம் தவசிகுளம் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கடந்த பல வருடங்களாக பூட்டப்பட்டுக் கிடந்த நிலையில், கடந்த ஆறு மாதங்களுக்குள்தான் இப்பகுதி மக்கள் பாடசாலையைத் திறக்கக் கோரி தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் முன்னால் போராட்டம் நடத்தியதன்விளைவாகப் பாடசாலை திறக்கப்பட்டது.


திறக்கப்பட்டு ஆறுமாதங்கள்ஆகிவிட்ட நிலையில் மேற்படி ஐந்தாம் வகுப்பு வரை இயங்கும் இப்பாடசாலைக்கு அதிபர் மட்டும் உள்ளார். இதுவரை ஒரு ஆசிரியர் கூட நியமிக்கப்படவில்லை. ஆனால் கோட்டக் கல்வி திட்ட விதிகளின்படி இரு ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். ஆனால் வலயக்கல்வி அலுவலகம் கண்ணை இறுக மூடிக்கொண்டு இருப்பது போல் செயற்படுகிறது. ஆசிரியர் இன்மையால் இப் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த வேண்டுகோளை கருத்தில் எடுத்தேனும் உடனடியாக இப்பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென இப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# சனிக்கிரக துணைக்கோளில் தரை இறங்கியது நாசா அனுப்பிய ஹைஜன்ஸ் ஆய்வுக்கலம்











சனிக் கிரகத் தின் துணைக் கோளான டைட்டா னில், ஹைஜன்ஸ் ஆய்வுக் கலம் தரையிறங்கியுள்ளது. அமெரிக்காவின் நாசா வெண்வெளி ஆய்வு மையம், கடந்த 1997 ஆம் ஆண்டு காசினி விண்கலத்தை விண்ணில் ஏவியது. இந்த விண்கலம் செவ்வாய், வியாழன் ஆகிய கிரகங்களைப் பற்றி ஆராய்ந்து விட்டு ஏழு ஆண்டுக்குப் பிறகு சனிக் கிரகத்தை நெருங்கி யுள்ளது. சனிக்கிரகத்தின் வளையங்களை பற்றியும் இந்த கிரகத்தில் துணைக் கோளான டைட் டானிஸ் பற்றியும் இந்த விண்கலம் ஆராய்ந்து வருகி றது. காசினியுடன் இணைந்த ஆய்வுக் கலமான ஹைஜன்ஸ், கடந்த வாரம் டைட்டானில் தரையி றங்கியது. ஹைஜன்ஸ் ஆய்வுக்கலத்தில் இணைக்கப் பட்டுள்ள புகைப் படக்கருவி கள் டைட்டானின் தரை தளத்தைப் படம் பிடித்து அனுப்பி யுள்ளன. இந்தப்படத்தை பார் த்து நாசாமற்றும் ஐரோப் பிய விஞ்ஞானிகள் பல்வேறு முடிவு களைத் தெரிவித் துள்ளனர் டைட் டான் கோள், புதன் கிரகத்தை விடப் பெரியது. இந்தக் கோளத்தில் மீதேன் வாயு மண்டிக்கிடக் கிறது. மைனஸ் 292 பாகை பாரன்ஹீட் அளவுக்கு குளிர் நிலவுகிறது. பனி ப்பாளங்கள் நிறைந்த இந்த கோள த்தின் தரைப்பரப்புக்கு கீழ் கடல்கள் இருக்கலாம் என விஞ்ஞா னிகள் கருதுகின்றனர் இந்த கோளத் தில் மேலும் என்னென்ன வேதிப்பொருட்களும் தாதுக்களும் இருக்கின்றன என்பது பற்றி ஆய்வு தொடர்கிறது.

நீண்டகால்வாய் போன்று காணப்படும் பகுதி என்ன என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை. ஆற்றங்கரை போன்று காணப்படும் இதைப் பற்றி நாசா விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த ஆய்வுகளின் மூலம் பூமியில் முதன் முதலாக எவ்வாறு உயிரினங்கள்தோன்றின என்பதற்கான சிறு ஊகங் களை அறிந்துகொள்ளலாம் என விஞ்ஞானிகள் கருது கின்றனர்.

''ஹைஜனஸ்'' உபகரணம் சுமார் 4மணித்தியாலங்களில் பெற்ற 474 சிறு தகவல்களை இது வரை பூமிக்கு அனுப்பி யிருப்பதாகவும் அவற்றுள் சில காணா மல் [மறைந்து] விட்ட தாகவும் அறியவருவதுடன் இதன் காரணம் என்ன என்பது பற்றியும் அறிய விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

# பாரதியார்



1882 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி தமிழகம் நெல்லை மாவட்டத்து எட்ட யபுரத்தில் பாரதியார் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர் தாயார் லட்சுமி அம்மாள், இவரது இள மைப் பெயர் சுப்பிரமணியன்.

ஆனால் இவரை சுப்பையா என்று செல்லமாகக் கூப்பிடு வார்கள். இவர் தமது 5 ஆவது வயதிலே தாயாரை இழந்து விட்டார். இளமைக் காலத்திலே யே பாடல்கள் எழுத ஆரம் பித்து விட்டார்.

சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல்கைவரப் பெற்ற பாரதி யார் தன் புலமைச் சிறப்பால் 11 ஆவது வயதில் எட்டயபுர சமஸ்த்தானத்தாரால் "பாரதி" என்னும் பட்டத்தைப் பெற்றார்.

பாரதியார் தமது 14ஆவது வயதில் 1897 ஆம் ஆண்டு ஆடி மாதம் 7வயதுப் பெண்ணாகிய செல்லம்மாளை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு 16 ஆவது வயது நடந்து கொண்டிருக்கும் பொழுது இவரது தந்தையார் இறந்து விட்டார்.

அதனால் பெரிதும் மனம் வருந்திய பாரதி காசிக்குச் சென்று அங்கு, தமிழ், ஆங்கிலம், சமஸ் கிருதம், ஹிந்தி போன்ற மொழி களைக் கற்றார்.

20 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த கவிஞன் என்ற சிறப்பைப் பெற்றார். மகாகவியின் பாடல்கள் எல்லாம் எளிமையானவை பாமர மக்களும் படித்து இன்புறக் கூடிய வகையில் இலகு தமிழில் பாடல் களை யாத்து அளித்த பெருமை பார தியாருக்கே உரியது.

மகாத்மா காந்தி வ.உ. சிதம் பரனார் போன்றோருடன் இணைந்து இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை கைது செய்யப்பட்டார்.

21 ஆவது வயதில் எட்டயபுர மன்னனின் சமஸ்தானத்தில் கவிஞராக விளங்கிய பாரதி 22 ஆவது வயதில் மதுரை சேதுபதி கலாசாலையில் தற்காலிக தமிழ்ப் பண்டிதராகப் பணி புரிந்தார். பின்னர் சுதேசமித்திரன் நாளிதழின் துணை ஆசிரியராக விளங்கினார். 1905 ஆம் ஆண்டு விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிதா அம்மை யாரைச் சந்தித்து தமது குருவாக ஏற்றுக் கொண்டார். 1907 இல் இந்தியா என்ற புரட்சி வார இதழின் ஆசிரியராக இருந்தார்.

ஆங்கிலேய ஆட்சியில் உயர்ந்த வேலை தமக்குக் கிடைத்திருந்தும் மிகுந்த வேதனம் அளித்திருந்தும் தன் மான உணர்ச்சியும்வீர சுதந்திர உணர்வும் இருந்ததனால் தனது வேலையை இராஜினாமா செய்து பத்திரிகையின் எழுத்தாளராகப் பணிபுரிந்து பத்திரிகை வாயிலாக வீர சுதந்திர உணர்வைப் பொங்கி யெழச் செய்தார்.

அழகுத் தெய்வம் "கவிதைக் காதலி" "கண்ணன் பாட்டு" என்பன பாரதியின் காதல் உணர் வைப் புலப்படுத்துவதாக அமை கின்றன.

இவை தவிர வேதாந்தச் சுவைமிக்க பாடல்களும் வசன கவி தைகள் பலவும் பாரதியாரால் வடிவ மைக்கப்பட்டன.

"ஓடிவிளையாடு பாப்பா" என்பதில் எப்படியெல்லாம் குழந் தைகள் வாழவேண்டும் என அறிவுரை கூறுகின்றார். "வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டீர்" என்ற பாடலில் நிறபேதம், சாதிபேதத்தைச் சாடு கின்றார்.

பாஞ்சாலி சபதம் என்னும் கவி தைத் தொகுதியில்பாரத மாதாவைப் பாஞ்சாலியாகக் காண்கிறார் பாரதியார்.

பாரதியார் புதுமை மிக்க, புரட்சி மிக்க புதிய ஆத்திசூடியை உருவாக் கினார்.தனது கதைகளின் மூலம் நீதியை நிலைநாட்டினார். "ஆறில் ஒருபங்கு" "சந்திரத் தீவு" மூலம் பெண் அடிமைநிலையினைச் சாடு கின்றார்.

பாரதியார் பாடாத துறையே இல்லையென்று கூறுமளவிற்கு எல்லாவற்றையுமே பாடியுள்ளார். இவர் கோயில் மதயானை ஒன்றிற்கு தேங்காய், பழம் கொடுத்த பொழுது அந்த யானையால் தாக்குண்டார். நோயின் கொடு மைக்கு ஆளானார் எனினும் மருத்து வமனை செல்ல மறுத்தார். இறுதியில் 1921 ஆம் ஆண்டு புரட் டாதி மாதம் 11 ஆம் திகதி தமது 39 ஆவது வயதில் இம் மண்ணுலகை விட்டு மறைந்தார்.

ooo

# எரிகற்கள்

நெருப்புப்பிழம்பாக இரு க்கும் சூரியனை சுற்றி புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளுட் டோ என்ற 9 கிரகங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தத்தம் பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன.

இவை தவிர 'அஸ்டிராஸ்ட்' எனப்படும் ஏராளமான எரிகற் களும் சூரிய மண்டலத்தில் உள்ளன. அவையும் தத்தம் பாதையில் சூரியனைச் சுற்றி வலம் வருகின்றன. எரிகற்கள் என்றால் பூமியில் உள்ள ஒரு சிறிய கல் போல் இருக்கும் என நினைத்து விடவேண்டாம். இந்த எரிகற்கள் சிறிய பாறாங்கல் அளவில் இருந்து மிகப்பெரிய மலை அளவுக்குக் கூட இருக்கும். எனவே இவற்றை 'பறக்கும் மலை'கள் என்று கூடக் கூறலாம். இந்த எரிகற்கள் உருவானது எப்படி என்பது பற்றி இதுவரை உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. பூமியைப் போன்று ஏதாவது ஒரு கிரகம் சூரிய மண்டலத்தில் ஏதோ கார ணத்தால் உடைந்து சிதறி எரிகற் களாக மாறியிருக்கலாம் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.


இந்த எரிகற்களில் சில அவ்வப் போது பூமியின் சுற்றுப் பாதைக்குக் குறுக்கே செல் கின்றன. இந்த எரிகற்களும் பூமியின் மீது மோதி விடும் வாய்ப்பு உள்ளது. கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி அன்று 10 மீற்றர் குறுக்களவே கொண்ட மிகச் சிறிய எரிகல் ஒன்று பூமிக்கு மிக அருகில் வந்தது. அருகில் என்றால் 6,500 கிலோ மீற்றர் தொலைவில் வந்தது. ஆனால் அது பூமியின் மீது மோதாமல் சென்று விட்டது. இது போன்ற சிறிய எரிகற்கள் பூமியின் மீது வந்து விழ வாய்ப்பில்லை. காரணம் அவை பூமியின் காற்று மண்டலத்தில் நுழையும் போது எரிந்து சாம்பல் ஆகிவிடும். அதனால் சிறிய எரிகற்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. பெரிய எரிகற்கள் என்றால் தான் பிரச்சினை. பெரிய மலை அளவுள்ள எரிகற்கள் பூமியின் மீது வந்து மோதினால் என்ன ஆகும் என்று நினைத்துப் பாருங்கள்.

பல கோடி ஆண்டுகளுக்கு முன் இது போன்ற பறக்கும் மலை ஒன்று பூமியின் மீது மோதியதால் தான் டைனோசர் விலங்கினமே பூண் டோடு அழிந்து இருக்கலாம் என்று நிபுணர்கள் கருது கிறார்கள். எனவே எரிகற்கள் பற்றி வானியல் நிபுணர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகிறா ர்கள் .கடந்த சில ஆண்டுகளில் மட்டும் ஒரு கிலோ மீற்றர் நீளம் கொண்ட பல எரிகற் களை அவர்கள் கண்டு பிடித்து ள்ளனர்.

அப்படிப்பட்ட எரிகற்கள் இப்போது பூமியை நெருங்கிக் கொண்டு இருக்கிறது .அந்த எரிகல்ஒன்றின் பெயர் 'ட்வுடா டிஸ்' இந்த எரிகல் கடந்த 1989ஆம் ஆண்டு பிரான்ஸ் விண்வெளி நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு பெரிய உருளைக்கிழங்கும் மற்றொரு சிறிய உருளைக் கிழங்கும் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டிருந்தால் எப்படி இருக்குமோ அந்தத் தோற்றத்தில் இருக்கிறது இந்த எரிகல்.

இதன் அகன்று விரிந்த பகுதியின் விட்டம் 4 கிலோ மீற்றர் ஆகும். குறுகிய பகுதி யின் விட்டம் 2கிலோ மீற்றர் ஆகும்.

செந்தளிரில்நிறையப் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களை மீட்க வேண்டும் என்ற அவா வுடன் செந்தளிருக்குப் போனால் அங்கே ஒருவரையும் காணவில்லை. இல்லத்துக் குள் சில அறைகள் கல்மூடிய நிலையிலும், சுவர்கள் இடிந்த நிலையிலும் காணப்பட்டன. அவற்றில் இருந்து உடனடியாக எவரையும் மீட்க முடியவில்லை. அருகில் உள்ள இடங்களில் பன்னிரண்டு, பதின் மூன்று வயது மதிக்கத்தக்கபிள்ளைகளின் சடலங்கள் காணப்பட்டன. அதற்கும் அங் கால போய்ப்பார்த்தோம். எங்கள் பணிமனை இருந்த இடத்துக்குப் போனோம் பணிமனையில் எவரையும் காணவில்லை. அதற்குப்பின்னால் வேறுபிரதேசங்களிலிருந்து கடற்கரை ஓரமாக தொழில் செய்வதற்காக குடும்பங்களுடன் பெருமளவானவர்கள் வந்திருந்தனர். அங்கிருந்த வீடுகளைக் கூடக் காணவில்லை. சின்னப் பிள்ளைகள் யாராவது இருப்பார்கள் என்று பார்த்தால் எவரையுமே காணவில்லை. கடல் பொங்கிக் கொண்டிருந்தது. எங்களுக்குப் பொறுப்பாக வந்த ரஞ்சித்குமார் சேர் எங்களை மரத்தின்மேல் ஏறுமாறு கூறுகின்றார். அதன்படி நாங்கள் செயற்பட்டோம். கடல் ஓய்ந்தது. மீண்டும் இறங்கி முல்லைத்தீவு பாடசாலைப் பக்கமாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டோம். அப்போது 24 வயது மதிக்கத்தக்க ஒரு அக்கா கிழிந்த ஆடைகளுடன் நீரில் விறைத்து நடுங்கிக்கொண்டிருந்தார். இந்த நிலையில் அவருக்குமேல் பெண்கள் அணியும் சேலை ஒன்றை போட்டுவிட்டு அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம். இப்படியான சம்பவம் ஒன்றை நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. காயப்பட்டவர்களைத் தூக்குவதற்கு ‘ரெச்சர்’ருக்குப் பதிலாகப் பாய்களையும் பெண்கள் அணியும் சாரிகளையும் தான் பயன்படுத்தினோம். இப்படியே அதைத்தாண்டிப் போய்க்கொண்டிருந்த போது குப்பைகள் குவியலாக வந்து அடைந்திருந்த இடத்தில் ஒரு கால் மாத்திரம் தெரிந்தது. அதில் கால்கொலுசு காணப்பட்டது. இதை வைத்து அவர் பெண் என்பதை உறுதிப் படுத்தினோம் அவரை மீட்பதற்காக அந்தக் குப்பைகளை அகற்றிவிட்டு அவரை வெளியில் எடுத்தோம். அவரின் உடலில் ஆடை கள் எதுவும் இருக்கவில்லை. அவரின் உயிரும் பிரிந்து போயிருந்தது. அப்படியே முல்லைத்தீவு சந்திப்பகுதியில் உள்ள கடைத் தொகுதியில் தேடுதலை நடத்தி னோம். அப்போது ஒரு பற்றிக்கடைக்கு அருகில் உள்ள கடையில் இருந்து ஒருகை எங்களைக் கூப்பிடுவது போல இருந்தது. உடனே அங்கு விரைந்தபோது ஒரு அம்மா சடலமாக இருந்தார். முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள தென்னைமரத்தின் கீழ் தென்னை ஓலையால் மூடுண்ட நிலையில் 30 வ்யது மதிக்கத் தக்க ஒரு தாய் தனது கால்முறிந்த நிலையில் முனகிக் கொண்டிருந்தார். அவரை அந்த ஓலையை அகற்றி விட்டு தூக்குவதற்கு முயற்சித்தோம். ஆனால் முடியாமல் போய்விட்டது. ஏனென்றால் அவர் கால் முறிந்த வேதனையில் கதறினார். அதனால் அவரைத் தூக்கிச்செல்ல முடியவில்லை. அந்தப்பகுதியில் எதேச்சையாகக் கிடைத்த சக்கர நாற்காலியில் வைத்து முழங்காலுக்கு மேலாக நின்ற தண்ணீருக்குள்ளால் பெரும் சிரமங்களின் மத்தியில் இழுத்துச்சென்றோம். அப்போது அவர் எமக்குச்சில உண்மைச்சம்பவங்களைத் திகைப்பூட்டும் கதைகளை உயிருக்காக உயிரைக்கொடுத்த மனிதர் பற்றி எல்லாம் ஏதோபுலம்பிக் கொண்டு மயங்கிப் போய்விட்டார் அந்தத்தாய் என்று, தனது வாழ்வில் என்றுமே மறந்துவிடமுடியாத சம்பவங்கள் இவை என்று தனது மீட்பு நடவடிக்கை அனுபவத்தைக் கூறி முடித்தார் அந்தக் காவல்துறை உறுப்பினர்.



எனக்கும் ஏதோ மண்மணக்கிறமாதிரித்தான் கிடந்தது இப்படி எல்லாம் கடல் வரும் எண்டு யார்தான் நினைத்தது. நான் பிள்ளைக்குச்சொன்னேன்அது கடலில் ‘பேத்தைகள்’ ஏதும் செத்திருக்கும் அதுதான் மணக்குது என்று சொல்லிட்டு துணியை வெட்டினேன்.

# என்ர பிள்ளையைக் காப்பாற்ற வந்துதான் அந்தக் காவல்துறை அண்ணாவும் செத்தவர்

பகுதி-04




சக்கரநாற்காலியில் இழுத்துச்சென்ற வேளை அந்தத்தாய் புலம்பிய சம்பவம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக அவரைத் தேடி அலைந்து ஒருவாறு சந்தித்தோம். அவர் கூறுகின்ற மனதை உலுக்கும் சம்பவத்தை உங்களுக்காகத் தருகிறோம்

மு.தவமணிதேவி என்ற அந்தத்தாய் நடந்த வற்றைக்கூறுகிறார் கேளுங்கள்:

எங்களது வீடுமுல்லைத்தீவு கோயில் குடியிருப்பில் இருக்கிறது. கடற்கரையில் இருந்து ஒரு 75மீற்றர் தூரம் தான் வரும் நான் அன்றைய தினம் வீட்டுக்குள் இருந்து உடுப்புத்தைப்பதற்காக துணி வெட்டிக் கொண்டிருந்தேன் நேரம் எட்டே கால் தான் இருக்கும். வீட்டுமுன் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த எனது பிள்ளைவீட்டு வாசல் வரை ஓடிவந்து “அம்மா கடல் மணக்குது ஒருக்கா என்னெண்டு வடிவாய்ப்பாருங்கோ” என்று சொன்னதும் பிறகு யாரோநீலச்சேட்டு போட்டவர்கள் வந்து என்னை மீட்டார்கள். அவர்களைக் கண்டதும் எனக்கு என்பிள்ளையின் ஞாபகம் வந்தது. நான் நினைத்தேன் காவல் பணி மனைப் பொறுப்பாளர் தான் எங்களை மீட்க வந்திருக்கிறார் என்று அவர்களிடம் என் பிள்ளை எங்கே என்று கேட்டேன் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. பிறகும் நான் மயங்கி இருக்கவேணும் முள்ளியவள்ளை ஆஸ்பத்திரியில்தான் எனக்கு சுய நினைவு வந்தது. அப்போது தான் உங்கள்

திடீரென கடலில் பெரும் சத்தம் கேட்டது. கடலில் ஆமிவந்துவிட்டான் போலக் கிடக்குது எண்டு மனசுக்குள் நினைத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியில் வந்து கடலைப்பார்த்தேன். என்ன அநியாயம் கடல் குளம் மாதிரி பொருபொரு என்று எட்டடி உயரத்தில் வந்து கொண்டிருந்தது. உடனே வீட்டுக்குள் இருந்த பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியேவந்து ஓடினேன். சிறிது தூரம் ஓடிப்போய் திரும்பிப் பார்த்தேன் எனது வீடு முழுக்க வெள்ளம் மூடிவிட்டது அடுத்த அலையும் திடீர் எண்டு வந்து கொண்டிருந்தது. அதில் இருந்து தப்பமுயன்று காவல்துறை அலுவலகத்தின் சமையல் அறைப்பக்கமாக கத்தியபடி ஓடினேன். இப்போது எனது இடுப்பளவில் தண்ணீர்வந்துவிட்டது. அப்போது காவல் பணிமனைப்பொறுப்பாளர் பணிமனையில் இருந்து வெளியே ஓடிக்கொண்டிருந்தார். நான் ‘ஐயோ என்ர பிள்ளையைக் காப்பற்றுங்கோ தண்ணி இழுக்குது” என்று கத்தினேன்.



சம்பவத்தில் சாவடைந்த காவல்துறைபரிசோதகர் கந்தசாமி குணேஸ்வரன்

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

எனது அவலக்குரலை கேட்ட காவல் பணிமனைப்பொறுப்பாளர் திரும்பி ஓடிவந்தார் அவர் என்னருகில் வர என்பிள்ளையை கடல் பறித்துவிட்டது உடனடியாக அவர் எட்டிப்பாய்ந்து பிள்ளையை பிடித்து தூக்கிக்கொண்டுஓட முற்படநான் கடலைத் திரும்பிப் பார்த்தேன் அடுத்த வெள்ளம் ஒருபனை உயரத்தில் வந்தது.

நான் பெரிய வெள்ளம் வருகுது “என்ரபிள்ளையைபத்திரமாகக் கொண்டுதப் புங்கோ” என்று கத்தினேன். கத்திய சில நொடிகளில் அந்தப் பெருவெள்ளம் என்னை தூக்கிக்கொண்டு வேகமாகப் போனது நான் செத்துவிடுவேன் என்று தான் நினைத்தேன். ஆனால் என்சாவுக்குள்ளும் ஒரு மகிழ்ச்சி இருந்தது. என் பிள்ளை தப்பிவிடுவாள் எப்படியும் காவல் பணிமனைப் பொறுப்பாளர் என்ரபிள்ளையைக் காப்பாற்றுவார் நல்ல இடத்தில் என்பிள்ளையை சேர்த்து விட்டேன் இனி நான் செத்தாலும் பரவாய்இல்லை என்று அந்த பேரலைக்குள் தத்தளித்தவாறு நினைத்தேன். பேரலை என்னைக் கொண்டு வந்து மரங்களுடனும் கட்டடங்களுடனும் உருட்டி அடித்து ஒருதென்னைமரத்தின் கீழ் போட்டுவிட்டது. தென்னை மரத்தைநான் பிடித்துத்தப்பினேனா? அல்லது. அலை தான் போட்டதா என்பதை என்னால் இப்ப வடிவாய்க்கூறமுடியவில்லை அலை அடித்து என்னை கொண்டு போனபோது எனது கால் அடிபட்டுநான் மயங்கிப் போனேன்.



பிள்ளை செத்துப் போச்சுது என்று அயலவர்கள் சொன்னார்கள். நான் பிள்ளையின் உடலைத்தேடி அலைந்து எடுத்துப்பார்த்தேன். நெத்தியில் மாத்திரம் ஒரு சிறிய கண்டல் இருந்தது. வேறு எந் தக்காயமும் இல்லை. பிள்ளையின் பொடியைக் கண்டதும் நான் ‘ஐயோ காவல்பணிமனைப் பொறுப்பாளர் என்ர பிள்ளையை பத்திரமா தானே கொண்டு வந்தவர் ஏன்என்ரபிள்ளை செத்தது.” என்று கத்தினேன். நான்கத்திக் கொண்டிருக்கும் போதுதான் அருகில் நின்ற ஒருவர் காவல் பணிமனைப் பொறுப்பாளரும் தப்பவில்லை அவரும் செத்துப் போனார் என்று கூறினார்.

**அ.லோகீசன்**

இப்ப எனக்கு இரண்டுகவலை என்னால இன்னுமொரு உயிர் போட்டுது. என்ர பிள்ளையைக் காப்பாற்ற அவர்திரும்பி ஓடி வந்து பிள்ளையை வேண்டாமல் ஓடிப் போயிருந்தால் காவல்பணிமனைப் பொறுப்பாளர் தப்பி இருப்பார். என்ரபிள்ளையைக் காப்பற்றவந்து தானே அந்த உயிரும் போனது. நான் இப்படிநடக்கும் எண்டு நினைக்கவே இல்லை “ என்ர பிள்ளைதான் தப்புவாள் எண்டு நினைச் சன் ஆனால் எல்லாம் வேறமாதிரி நடந்து போச்சுது” என்று கூறியபடி கண்ணீர்விட்டழுதார். அந்தத்தாய்.

பேரலையால் தகர்ந்து போன வட்டுவாகல் பாலம் போட்டது எப்படி என்பதை அடுத்து தருகிறோம்.. (தொடரும்)

# போரினால் இடம்பெயர்ந்த தமிழர்களையும் மீளக் குடியமர்த்த ஐ.நா கோரிக்கை

**உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களையும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆழிப்பேரலையினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கான மீளக்குடியமர்த்தல் திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்குப் பொறுப்பான ஸ்தாபனம், சிறிலங்கா அரசினைக் கேட்டுள்ளது என வொய்ஸ் ஒ:ப் அமெரிக்கா நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.**

அந்த ஸ்தாபனத்தின் பிரதி உயர் ஸ்தானிகர் மோர்ஜேன் அவர்கள் கடந்த மாதம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்து பார்வை யிட்ட பின்னரே இக் கோரிக்கையினை கொழும்பில் நேற்று முன்தினம் அவர், சிறி லங்கா அரசிற்கு விடுத்துள்ளார். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலான வர்கள் தமிழ் மக்கள் எனவும், உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்கனவே இடம்பெயர்ந்தி ருந்த இவர்களே மீண்டும் ஆழிப்பேரலை யினால் இடம்பெயர வேண்டிய சூழ் நிலைக்கு உள்ளானார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இக் கோரிக்கை பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், போரி னாலும் அலையினாலும், பாதிக்கப்பட்ட மக் களை சம காலத்தில் இணைத்து மீளக் குடியமர்த்தும் பணிகளில் ஈடுபட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 20 வருடகால யுத்தத்தில், கிட்டத்தட்ட 80,000 மக்கள் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள தாகவும், அவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள நிவாரண முகாம் களிலேயே தங்கியுள்ளனர் என்பதனையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நிவாரணம் வழங்காவிடின் வேலை நிறுத்தம் செய்ய முடிவு

**-தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவிப்பு**

(கொழும்பு)

சுனாமி அனர்த்தங்களினால் பாதிக் கப்பட்டுள்ள தென்பகுதி தனியார் பேருந்து சொந்தக்காரர்களுக்கு நிவாரணம் வழங்காவிட்டால் தனியார் பேருந்து சங்கம் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவ தாக அரசாங்கத்திற்கு அறிவித் துள்ளது.

மோட்டார் அத்தாட்சிப் பத்திரம், மாதாந்த சேவைக்கால நிதியை தற்காலிகமாகநிறுத்த மோட்டார் போக்குவரத்து சட்டங்களை திருத்தியமைக்காவிடில் தனியார் பேருந்து ஊழியர் போராட்டம் நடைபெறு வதைத் தவிர்க்க முடியாதென சம்மேளனச் செயலாளர் நந்தன கடந்த செவ்வாய்கிழமை தெரிவித்துள்ளார். சுனாமி அனர்த்தங் களினால் 135 தனியார் பேருந்துகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், அவர் களின் குடும்பங்களும் கடுமையாகப்பாதிக் கப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

# சுனாமியால் 4,03,000 பேர் தொழில் வர்ய்ப்பை இழந்தனர்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தங்களினால் 4,03,000 பேர்கள் தற்பொழுது தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.இவர்கள் உல்லாசப் பிரயாண ஹோட்டல் கள், மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் தொழில் புரிந்தவர்களா வார்கள்.

மீண்டும் இவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்குவதென்றால் மாதாந்தம் 10,000 தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை சுனாமி அனர்த்தங்களினால் 15000 கர்ப்பிணிப் பெண் கள் கணவன்மார்களை இழந்து தற்பொழுது அகதிமுகாம்களில் வசித்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகளின் மக்கள் கணிப்பீடு காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஜோ.கோலி தெரிவித்துள்ளார்.

இவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு 75 கோடி அமெரிக்க டொலர் வழங்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# நிவாரணப்பணிகளை த.பு.கழகம் சரியான முறையில் மேற்கொள்கிறது

**ஜாதிக ஹெல உறுமய பா.உ தெரிவிப்பு**

சுனாமி பேரலையினால் பாதிக் கப்பட்ட வட கிழக்கு மக்களுக்கு தேவையான நிவாரணப் பணி களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சரியான முறையில் மேற்கொண்டு வருவதனை ஏற்றுக் கொள்ள வேண்டும், என்று ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப் பினர் வண. அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுப் படைகள் தமது கட மைகள் முடிந்தவுடன் தமது நாடு களுக்கு திரும்பி விட வேண்டும் என்றும் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்தார். கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவற் றைத் தெரிவித்த தேரர் மேலும் கூறுகையில்: வடகிழக்கில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மனிதாபிமான உதவிகளைச்செய்து வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பதுஎதற்குச் சார்பானது? எந்த அமைப்புடன் தொடர்புடை யது? என்பது குறித்து நாம் அலட் டிக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உண்மையில் வட கிழக்கில் சுனாமி பேரலையால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்து வருவதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதேவேளை இலங்கையில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள வெளிநாட்டு இராணு வம் வந்துள்ளது. அவற்றின் சேவையை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மீட்புப் பணிகள் முடிவ டைந்தவுடன் இராணுவம் திரும்பி விட வேண்டும். அதற்குப் பின்ன ரும்,அவர்கள் இலங்கையில் தங்கி யிருப்பதனை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். சுனாமி பேரலையினால் பாதிப்படைந் துள்ள நாட்டின் கரையோரப் பிர தேசங்களைக் கட்டியெழுப்ப சனா திபதி அனர்த்த முகாமைத்துவ குழுவொன்றினை நியமித்துள்ளார். இதில் அவருக்குத் தேவையான உயர் அதிகாரிகளே நியமிக்கப்பட் டுள்ளனர். இது ஏற்றுக் கொள்ள முடியாது. பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவப் படுத்துகின்ற அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதி நிதித்துவமும் மேற்படி அனர்த்த முகாமைத்துவக் குழுவில் இடம் பெற வேண்டும். அப்போது தான் இந்நாட்டின் சனநாயகம் உறுதிப் படுத்தப்படும். பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் கரையோரப் பிரதேசங் களைக் கட்டியெழுப்ப அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகத்தெரியவில்லை. பாதிப்படைந்துள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும், சகல தரப்பினரும் இடம்பெறும் வகையிலான குழுக் கள் அமைக்கப்பட வேண்டும். அதேவேளை பாரிய கட்டடங்கள், கைத்தொழில் கிராமங்கள் போன்ற வற்றை உடனடியாக அமைப்ப தனை தள்ளி வைத்துவிட்டு பாதிக் கப்பட்டுள்ள மக்களுக்கு வீடு களைக் கட்டிக் கொடுக்க அரசாங் கம் முன்னுரிமை வழங்க வேண் டும். சுமார் 80 ஆயிரம் குடும்பங் கள் அகதி முகாம்களில் இருக்கின் றன. இவர்களுக்கு நிரந்தர இருப் பிடங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். இதற்காக நாம் நாட் டைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத் திட்டம் ஒன்றை தயாரித் துள்ளோம். இதனை அரசாங் கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளோம் என் றும் அவர் கூறினார்.

# ஆழிப் பேரலையால் திருமலையில் 32495 குடும்பங்கள் பாதிப்பு

**– இறுதிக்கணிப்பீடு தெரிவிப்பு**

(திருகோணமலை)

திருமலையில் ஏற்பட்ட ஆழிப் பேரலையின் தாக்கத்தினால் 32,495 குடும்பங்கள் பாதிக்கப்பட் டுள்ளதாக மாவட்டச் செயலகத் தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இறுதிக்கணிப்பீடுகள் தெரிவித்துள் ளன.

சனாதிபதி செயலகத்திலிருந்து திருமலைக்குச் சென்றுள்ள அதி காரிகள் குழுவினர் இவ் விபரங்கள் தொடர்பான பட்டியலைநேற்று முன்தினம் கொழும்பிற்குக் கொண்டுசென்றுள்ளனர். இப்பட் டியலின் அடிப்படையில் பாதிக் கப்பட்ட மக்களுக்கான நிவாரண இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பாதிக்கப் பட்டவர்களில் 60விழுக்காட்டிற்கு அதிகமானோர் மீனவக்குடும்பங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# குண்டு துளைக்காத கவசங்களால் விமான நிலையத்தில் பரபரப்பு

கடந்த வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட குண்டு துளைக்காத பாதுகாப்புக் கவசங்கள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டவை அல்ல என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வேறு நாடொன்றிற்கு செல்லவேண்டிய இக்குண்டு துளைக்காத கவசங்கள் அடங்கிய பொதி தவறுதலாக பிழையான ஒரு அறையில் வைக்கப்பட்டிருந்ததே இப் பரபரப்பிற்குக் காரணம். இந்த விவகாரத்தில் பிரிட்டன் நாட்டுத் தூதுவர் தலையிட்டு நிலைமையினை அதிகாரிகளுக்கு விளக்கிய பின்,பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் இப் பொதியினை மீளப் பெற்றுக் கொண்டது.

**- நிவாரணப்பணிகளில் அரசு புலிகளுடன் இணையாவிடின் -**

# இ.த.அ.சபையின் நியாயப்பாட்டை உலகம் புரிந்து கொள்ளும் நிலை வரும்

**- அரசியல்சட்ட ஆய்வாளர் வி.ரி.தமிழ்மாறன்**

(லண்டன்)

அரசாங்கம் சுனாமியால் ஏற்பட்டபேரழிவில் வடக்கு கிழக்கு மக்களுக்கான நிவாரணப் பணி களை விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து ஈடுபடமுடியாத நிலைமை ஏற்படுமேயானால் விடுதலைப்புலி களின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கானதேவைப்பாட்டின் அத்தியாவசியத்தையும்அதனுடைய நியாயப்பாட்டையும் சர்வதேச சமூ கம் உணர்ந்து கொள்ளும் நிலை ஏற்படும் என அரசியல்சட்டஆய் வாளர் வி.ரி.தமிழ்மாறன் கூறியுள் ளார்.

லண்டன் பி.பி.ஸியின் தமி ழோசைக்கு அவர் வழங்கிய செவ் வியின்போது கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சுனாமி பேரலையின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமை அரசைப் பொறுத்தவரை பொருளாதார ரீதி யாக ஒரு பலத்தை ஏற்படுத்தி உள் ளது.

சனாதிபதி ஐந்து வருடங்களுக் குத் தேர்தலைப்பற்றிச் சிந்திக்கத் தேவைஇல்லை என்பதன் உள் விடயமும் அதுதான்.

அரசு பொருளாதார நெருக் கடிக்கு எப்படி முகம்கொடுக்க வேண்டும் என்றிருந்த பெரிய நெருக்கடி சுனாமிபேரலையில் சற்று அகன்றிருப்பதாகத் தெரிகின் றது.

விடுதலைப்புலிகளைப் பொறுத் தவரை இந்த நிவாரணப்பணிக ளில் அவர்கள் ஏற்கனவே ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இதைஒரு பாரியளவில்மேற் கொள்ள வேண்டிய அவசியம் ஏற் பட்டுள்ளது. மீள்கட்டுமானம், புனர மைப்பு போன்றவை அவர்களின் அரசியல் கோரிக்கையோடு ஏற் கனவே பின்னிப் பிணைந்தவை யாகவே இருந்துள்ளன.

ஆகவே அழிவினுடைய அளவு இந்தப் புனரமைப்பு வேலை களினுடைய அளவில் ஒருமாற் றத்தை அதிகரித்துள்ளதே தவிர அரசியல் தார்ப்பரியத்தில் மாற்ற மடைந்ததாக இல்லை. அரசாங்கத் தைப் பொறுத்தளவில் அந்த முன் னுரிமை நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுனாமியால் உயிரிழந்த மக்களுக்கு திருமலையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எதிர்வரும் 26 ஆம் திகதியன்று , சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த அனைத்து மக்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வை திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் பேரவை ஒழுங்கு செய் துள்ளன. இதனையொட்டி திருகோணமலை மாவட்ட மக்களுக்கு ஒரு வேண்டுகோளையும் அது விடுத் துள்ளது.

சுனாமி பேரலை அனர்த்தத்தில் உயிர் நீத்த அனைத்து மக்களுக்குமான ஆத்ம சாந்திப் பிரார்த் தனை ,இரங்கல் அஞ்சலி நிகழ்வு திருமலை மாவட் டத்தில் 26.01.05 புதன்கிழமை இன,மத,மொழி வேறு பாடின்றி தமிழ்,சிங்கள,முஸ்லிம் மக்கள் பற்றி தமது பிரார்த்தனையை மேற்கொள்ளும் விதத்தில் ஒழுங்கு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்றைய தினம் கலைநிகழ்வுகள்,விளையாட்டு,களியாட்ட நிகழ்வுகள் யாவற்றையும் நிறுத்துவதுடன் தனிப்பட்ட வர்கள் தங்கள் இல்லங்களில் ஒழுங்கு செய்யும் விசேட நிகழ்வுகளையும் ஒத்திவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு அவ்வேண்டு கோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

—இயற்கை அனர்த்தத்திலிருந்து பாதுகாக்க—

# கடற்கரையோரப் பகுதிகளில் மரமுந்திரிகை நாட்டத்திட்டம்

முந்திரிகை மரங்களுக்கு சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களைத் தாங்கும் சக்தி உள்ளதால் அம்மரங்களை நாட்டின் கடலோரப் பகுதிகளில் அதிகளவு பயிரிட வேண்டும் என இந்திய முந்திரி அபிவிருத்திச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

சபைத் தலைவர் பரதன்பிள்ளை இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, முந்திரி மரங்களைக் குறிப்பிட்ட வகை மண்ணில் தான் பயிரிட வேண்டும் என்பதில்லை. எந்த மண்ணிலும் பயிரிடலாம். இம்மரங்களின் மீதுகுறைந்த பட்ச அளவே கவனம் செலுத்தினால் போதுமானது. முந்திரி மரங்களை கடற்கரையோரப்பகுதிகளில் பயிரிடுவதால் மண் அரிப்பு தடுக்கப்படும். மேலும் சுற்றுப்புறத்தில் பசுமையை அதிகரிக்கவும் , அதிகளவிலான கடல்காற்றைத் தடுக்கவும் இம்மரங்கள் பெரிதும் துணை புரிகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களைத்தடுத்து நிறுத்தும் ஆற்றலையும் இம்மரங்கள் பெற்றுள்ளன.

மேலும்இம்மரங்களால் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகமும் அதிகரிக்கும். தற்போது முந்திரியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். இதன்மதிப்பு தற்போது ரூபா 3000 கோடி. கடற்கரையோரப் பகுதிகளில் இம்மரங்களை அதிகளவு பயிரிடுவதன் மூலம் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பையும் உருவாக்க முடியும் இயற்கைச் சீற்றத்திலிருந்து தப்பிக்க கடற்கரையோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு ஒதுக்கப்படும் பணத்தை முந்திரி பயிரிடுவதற்கு பயன்படுத்தலாம். இதன் மூலம் குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெறலாம். இவ்வாறு பரதன்பிள்ளை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்..

# அந்தமான் தலைநகர் ஒன்றரை மீற்றர் நகர்வு

(புதுடில்லி)

கடந்தமாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற சுனாமித் தாக்கத்திற்குப் பின் அந்தமான் தீவின் தலைநகரான போட்பிளேர் துறைமுகம் ஒன்றரை மீற்றருக்கும் அதிகமாக நகர்ந்து இருக்கின்றது எனவும் கடல்மட் டத்தின்அளவு ஒன்றரை மீற்றர் உயர்ந்திருப்பதாகவும் இந்திய நிபுணர்கள் குழு ஒன்று தெரிவித்திருக்கின்றது. இதனால் உலக வரைபடத்தை எதிர்காலத்தில் மாற்றிவரைய வேண்டிவரும் எனவும் அந்தமான் தீவு நோக்கிச் செல்லும் விமானங்கள் கப்பல்கள் போன்றன தமது இறங்கும் தரிக்கும் நிலைகள் தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டிவரும் எனவும் அக்குழு அறிவித்திருக்கிறது.

# பாபர் மசூதி இடிப்பு வழக்கு
# அத்வானிக்கு மீண்டும் அழைப்பாணை

தேசிய சனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இருந்து பா.ஜனதா தலைவர்கள் அத்வானி முரளி மனோகர் ஜோஷி உட்பட20பேர் விடுவிக்கப்பட்டனர்.

இப்போது அத்வானி ஜோஷி உட்பட 20 பேரையும் வழக்கில் சேர்த்து லக்னோ பெஞ்ச் உயர் நீதிமன்றத்தில் சி.பி.ஐ மறு விசாரணை மனுவைத் தாக்கல் செய்து இருக்கின்றது. இந்த வழக்கு 17 ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அத்வானி, உமாபாரதி, முரளிமனோகர் ஜோஷி, அசோக் சிங்கால், விஸ்ணு ஹரிடால்மியா, ஆச்சாரியா கிரிராஜ் கிஷோர் உட்பட 19 பேருக்கு அழைப்பிதழ் அனுப்ப நீதிபதி எம்ஏ கான் உத்தரவிட்டார். இவர்கள் பெப்ரவரி 25ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும். இந்த வழக்கில் ஏற்கனவே விடுவிக்கப் பட்டவர்களில் ராமச்சந்திரா பரம்ஹன்ஸ் இறந்து விட்டார். எனவே அவரைத் தவிர மற்ற 19 பேருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது.


முதலாம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு
26
12
1949

உதிர்வு
22
01
2004

நாட்டுப்பற்றாளர் அமரர்
**பொன் விநாயக மூர்த்தி**
அவர்களின்
ஓராமாண்டு நினைவஞ்சலி

அன்புக்கோர் உறைவிடமாய்
நட்புக்கோர் நாயகனாய்
பொறுமைக்கோர் இலக்கணமாய்
பண்புக்கோர் இருப்பிடமாய்
சேவைக்கோர் எடுத்துக்காட்டாய்
நாடுபோற்றும் உத்தமனாய் வாழ்ந்து
வாழவைத்து எமை எல்லாம்
கதிகலங்க வைத்து எங்குசென்றீர்கள்.

துயருறும் குடும்பத்தினர்

(5583)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம்,புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழுங்கப்படும் புழுங்கல் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01 1.யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 சனவரி பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கு தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ சங்கங்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.ச்ங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பலநேக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது.) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படும் இடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 சனவரி (MT) | 2005 பெப்ரவரி (MT) | 2005 மார்ச் (MT) |
| 1 | சாவகச்சேரி | 190 | 190 | 190 |
| 2 | கைதடி | 70 | 70 | 70 |
| 3 | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 4 | உடுப்பிட்டி | 32 | 32 | 32 |
| 5 | கட்டைவேலி-நெல்லியடி | 45 | 45 | 45 |
| 6 | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 7 | புலோலி | 27 | 27 | 27 |
| 8 | மருதங்கேணி | 80 | 80 | 80 |
| 9 | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 | 90 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16 | தெல்லிப்பழை | 150 | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு- நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 | 45 |
| 21 | ஊர்காவல்துறை | 70 | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 | 30 |
| | மொத்தம் | 2500 | 2500 | 2500 |

02 2.கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத் தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03 கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/=ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.01.20 ஆம் திகதி தொடக்கம் 2005.02.07 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04 மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

05 கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் அரிசியாக இருந்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06 பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களை தலைவர்,மாவட்ட கேள்விச்சபை,மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.(அரசாங்கஅதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 08.02.2005 பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

07 கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் **"புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி"** என எழுதப்படல் வேண்டும்.

08 கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்குத் தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அரசாங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.


09 ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10/= மீளளிக்கப்படக் கூடிய வைப்பாகச் செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond)செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10 கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

10 கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

*க. கனேஷ்,*
*தலைவர்/ அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச்சபை /மாவட்ட செயலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*20. 01. 2005.*

*(சி.11089)*



# உலக 11பேர் - நியூசிலாந்து ஒரு நாள் போட்டி இன்று



உலகின் பிரபல சுழல் பந்து வீச்சாளர்களான ஷேன் வோனும், முத்தையா முரளிதரனும் உலக 11 பேர் அணியில் இணைந்து நியூசிலாந்து அணிக்கெதிராக சாதனை படைக்க விருக்கின்றனர். நியூசிலாந்தின் கிரிஸ்செச்சியில் நடைபெறும் முதல் போட்டியிலும் அடுத்துவரும் 2 போட்டிகளிலும் இவர்கள் இருவரும் பங்கேற்கின்றனர்.

இது தொடர்பாக நியூசிலாந்து அணியின் சகல துறை வீரரான டேனியல் விட்டோரி இவர்கள் இருவரையும் சமாளிப்பது சாத்தியமாகி போட்டியை எவ்வாறு வெல்ல முடியும் என்று தெரிவித்துள்ளார். முதல் 20 ஓவர்களும் தமக்கு மிகக்கடினம் என்றும் கடுமையான போட்டியாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். ஷேன் வோனுடன் இணைந்து அண்மையில் உலக 11 பேர் அணியில் பங்கேற்ற விட்டோரி அப்போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதேவேளை இந்த போட்டிகளில் பங்கேற்க முன்பு வீரர்கள் ஒரு மணித்தியாலம் பயிற்சியிலீடுபட அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இப்போட்டியில் முதுகுப்பிடிப்பால் அவதியுறம் ஜேக்கப்ஓரத்துக்கு பதிலாக நியூசிலாந்து றக்பி சாதனை வீரர் ஜெப்வில்சன் பங்கேற்கிறார்.

# இரண்டாவது சுனாமி கிரிக்கெட் பெப்ரவரி 13 இல் கொல்கத்தாவில்



இரண்டாவது சுனாமி நிவாரணக் கிரிக்கெட் அடுத்த மாதம் கொல்கத்தாவில் நடைபெறும் என உறுதிசெய்யப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டும் வகையில் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்று மெல்பேர்ன் நகரில் நடத்தப் பட்டது. இதன் தொடர்ச்சியாக 2ஆவது ஆட்டம் கொல்கத்தாவில் அடுத்த 13ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. சர்வதேச 11 பேர் மற்றும் ஆசிய 11 பேர் அணிகள் இந்தப் போட்டியில் மோதவுள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்தப் போட்டிக்கான முதல் ஆட்டத்தில் சர்வதேச 11 பேர் அணி வெற்றிபெற்றது. இந்தப் போட்டிக்காக வரிவிலக்கு அளிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.




## வி.பி. கிண்ண முக்கோண கிரிக்கெட்

# மேற்கிந்தியத்தீவு அபாரம் அவுஸைக் காப்பாற்றியது மழை





வி.பி. கிண்ணத்துக்கான முக்கோண ஒரு நாள் போட்டியில் நேற்று நடைபெற்ற மேற்கிந்தியத்தீவு, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டி கால நிலை சீரின்மையால் முற்றாக கைவிடப்பட்டது.

பிறிஸ்பேனில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவு முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வெவல் கெய்ன்ஸ் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 107 ஓட்டங்களைக் குவித்தார்.

இவரைவிட சந்தர்போல் 45 ஓட்டங்களையும், கைல்ஸ் 26 ஓட்டங்களையும், சர்வான் 27 ஓட்டங்களையும், பிறைவோ 27 ஓட்டங்களையும் முறையே அதிகபட்சமாகப் பெற்றனர். லாறா ஆறு ஓட்டங்களை மாத்திரமே பெற்றார்.

பந்து வீச்சில் கிளெஸ்பி மூன்று விக்கெட்டுக்களையும், வட்சன் இரண்டு விக்கெட்டுக்களையும், பிரெட்லீ, கஸ்பரோவிச், லீமன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு 264 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்திரேலியா ஆரம்பத்திலேயே தடுமாறியதுடன் 12 ஓட்டங்களைப் பெற்றபோது ஆரம்ப இரு விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்த நிலையில், குறுக்கிட்ட மழையால் போட்டி தடைப்பட்டு மீண்டும் ஆரம்பமாகியது. அப்போது அவுஸ். அணி மேலும் மூன்று விக்கெட்டுக்களை இழந்தது. 11 ஓவர் நிறைவில் மொத்தம் 43 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தபோது மீண்டும் தொடர்ந்து பெய்த மழையால் போட்டி முற்றாகக் கைவிடப்பட்டது. இதனால் மேற்கிந்தியத்தீவின் அருமையான வெற்றி வாய்ப்பு கைநழுவிப்போனது.

துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ்ட் 6, ஹெய்டன் 6, பொண்டிங் 2, கிளார்க் 2, சைமன் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்ட மிழந்தனர்.

பந்து வீச்சில் பெற்றோ கொலின்ஸ் மூன்று விக்கெட்டுக்களையும், பிரெட்சோவ், டிலோன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# முதலாவது ஒரு நாள் போட்டி சிம்பாப்வேக்கு 22 ஓட்ட வெற்றி



சிம்பாப்வே - பங்களா தேஷ் அணிகளுக்கிடையிலான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் நடந்தது.

முதலில் விளையாடிய சிம்பாப்வே அணி எட்டு விக்கெட் இழப்பிற்கு 251 ஓட்டங்களை எடுத்தது. ரெயிலர் 58 ஓட்டங்களையும், மசகட்சா 54 ஓட்டங்களையும், சிக்கும்புறா 41 ஓட்டங்களையும் எடுத்தனர்.



அடுத்து 252 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் அணி 43 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் சிம்பாப்வே அணி 22 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய-பாக். கிரிக்கெட் போட்டி நடைபெறும் இடங்கள் அறிவிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பெப்ரவரி 25ஆம் திகதி இந்தியா செல்கிறது. அந்த அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டியில் இந்தியாவுடன் மோதவுள்ளது. இரு அணிகள் மோதும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிக்கான இடங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. திகதி உறுதி செய்யப்படவில்லை. டெஸ்ட் போட்டிகள் மொகாலி, அகமதாபாத், பெங்களூரிலும், ஒரு நாள் போட்டிகள் கொச்சி, விசாகப்பட்டினம், கான்பூர், ஜாம்ஷெட்பூர், டில்லியிலும் நடைபெறவுள்ளன.



நேற்றுடன் கால்பந்து உலகை விட்டு ஓய்வுபெறும் பிரான்சின் சாதனை வீரர் இம்மானுவல் பெட்டிட். 1998ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் பிரேசிலுடனான போட்டியின்போது.

# டெஸ்ட் தொடரை சமன் செய்யும் அழுத்தத்தில் உள்ளோம் - கலிஸ்



இங்கிலாந்து தமது அணியை 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தாலும் தற்போது நடைபெறும் இறுதியும் 5விதமான போட்டியை எப்படியாவது வென்று தொடரை சமன் செய்யும் அழுத்தத்திற்குட்பட்டிருப்பதாக தென்னாபிரிக்காவின் பிரபல துடுப்பாட்ட வீரர் ஜக் கலிஸ் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி விளையாட்டு மஞ்சரிக்கு அவர் அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது, முன்பொருபோட்டித் தொடரில் இங்கிலாந்து அணி தமக்கு செய்ததுபோல இம்முறை நாம் செய்வோம் என்று கூறினார். அத்தொடரில் இறுதி வரை நன்றாக ஆடி வெற்றி நோக்கிச் சென்றபோது இங்கிலாந்து கடைசிப்போட்டியில் தொடரை சமன் செய்து விட்டதாக குறிப்பிட்டார் 4ஆவது போட்டியில் தமது தரப்பு துடுப்பாட்டம் பிரகாசிக்கவில்லை இது தொடரக் கூடாது என்று கூறிய அவர் அடுத்து வரும் மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட் தொடரை முடித்து விட்டு கிள மோகன் கழக அணியில் இணைந்து ஆடப்போவதாகத் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இந்தியாவின் சானியா மிஸ்ரா தோல்வி



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று 3-ஆவது சுற்று ஆட்டங்கள் நடந்தன. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் அமெலிமவுரஸ்மோ (பிரான்ஸ்) - அனா இவேனா விக் (செர்பியா) மோதினார்கள். மவுரஸ்மோ இதில் 6-2, 7-5 என்ற நேர் செட் கணக்கில் எளிதாக அனாவை தோற்கடித்து 4-ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்ற ஆட்டங்களில் ரஷ்ய வீராங்கனை வெரா 7-5, 6-4 என்ற செட் கணக்கில், லீனா (ஜேர்மனி) வையும், இலியா(இத்தாலி), 6-1, 6-0 என்ற நேர் செட்டில் எலீனா பால்ட்சாவையும் (ஜேர்மனி) தோற்கடித்து அடுத்த சுற்றுக்குள் நுழைந்தனர். இதனைவிட உலகில் ஏழாம் நிலை வீரரான செரினாவிடம் இந்தியாவின் சானியா மிஸ்ரா நேர் செட்டில் தோல்வி கண்டார். ஆண்கள் பிரிவில் மரட்சபின், அகாசி, பெடரர் ஆகியோர் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.




# 3 வருடமாக உதவு தொகை வழங்கப்படவில்லை யாழ். கிரிக்கெட் சங்க அ.வி.கழகங்கள் விசனம்

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் வருடாந்தம் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு வழங்கப்பட்டு வந்த உதவு தொகை கடந்த மூன்று வருடங்களாக கிடைக்கவில்லையென யாழ். கிரிக்கெட் சங்க அங்கத்துவ விளையாட்டுக்கழகங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்திற்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வருடாந்தம் 75 ஆயிரம் ரூபாவை கிரிக்கெட் அபிவிருத்திக்காக கடந்த காலங்களில் வழங்கி வந்துள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டில் இருந்து யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் உரிய கணக்குகளை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுப்பாமையினால் இவ் உதவித் தொகையை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வழங்காது தடுத்து வைத்துள்ளது எனவும் தெரிய வருகிறது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் பெரும்பான்மையான விளையாட்டுக் கழகங்கள் கையொப்பம் இட்டு யாழ். மாவட்ட கிரிக்கெட்சங்கம் மற்றும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வடமேல் மாகாண கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் மகஜர்களைச் சமர்ப்பித்துள்ளன.(ஞ)



### சிந்தனைக்கு

இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 22-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23ela @ yahoo .com

## சுனாமி என்றால் என்ன...?

"ஐந்து வருட காலங்களுக்கு நாட்டில் எந்தவொரு தேர்தலுக்கும் இடமில்லை" என்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூற்றுக்கள் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கு கடும் சீற்றத்தை உண்டு பண்ணியுள்ளது. சுனாமி அரசியல் அனர்த்தத்தை வைத்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியல் ஆதாயம் தேட முற்படுவதாக அது குற்றம் சாட்டியுள்ளது.

சுனாமிப்பேரலை பெரும் அனர்த்தம் ஒன்றை ஏற்படுத்தாது விட்டால் இன்று அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான முன்னோடி நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக்கட்சி தொடங்கியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியஅமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு இரண்டாண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதித்து அளிக்கப்பட்ட தீர்ப்பு, கட்டுப்படுத்தப்படாத விலைவாசி ஏற்றம் என்பவற்றை வைத்து ஐ.தே.கட்சி போராட்டங்களை நிச்சயமாக நடத்தயிருக்கும்.

ஆனால் டிசம்பர் 26 இல் நிகழ்ந்த சுனாமி பெருஅனர்த்தத்தினால் ஐ.தே.கட்சிஅரசுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கைவிட வேண்டியதாகியது. மக்களின் துன்பங்களில் பங்கேற்கவும் வேண்டிய தேவை விரும்பியோ விரும்பாமலோஅனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஏற்பட்டது.

இத்தகையதொரு நிலையில்தான் ஐ.தே.கட்சி தனது நிலைப்பாட்டை–அதாவது அரசாங்கத்தைத் தீவிரமாக எதிர்க்கும் போக்கைக் கைவிட்டு சுனாமியால் ஏற்பட்ட அனர்த்தத்தில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் அரசாங்கத்தின் செயலுக்கு ஒத்துழைக்கும் வகையில் அதாவது அரசுடன் பகையுணர்வைக் கடைப்பிடிக்காது நடந்து கொண்டது.

இறுதியாகச் சில ஊடகங்களில் வெளியாகும் தகவல்களின் படி ஆளும் கூட்டணிக்குள் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்டுள்ளதெனவும் சுனாமி அனர்த்த புனர்நிர்மாண விடயத்தில் இருதரப்பினர் இடையேயும் மோதலை வளர்த்துக்கொள்வதில்லை எனக் கனவான்கள் உடன்பாடு ஒன்று நிலவுவதாகவும் கூறப்பட்டிருந்தது.

ஆனால் கனவான்கள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டிருந்ததோ இல்லையோ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சரி அதன் துணைத்தலைவர் கருஜெயசூரியவும் சரி ஆளும் தரப்பினருடன் முரண்பட்டுக் கொண்டிருப்பதில் விருப்பம் கொண்டிருக்கவில்லை. ஆகையினால் அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுடன் செயலாற்ற விரும்பினர் என்றே கொள்ளலாம்.

ஆனால் அரசாங்கத்துடன் கனவான்கள் உடன்பாடு செய்து கொள்வதென்பது புத்திசாலித்தனமானதா? என்பதை ஐக்கிய தேசியக் கட்சி முதலில் தீர்மானிக்கவேண்டும். அடுத்ததாக கனவான்மார் உடன்பாட்டிற்கு சனாதிபதி சந்திரிகா பொருத்தப்பாடானவரா? என்பது குறித்தும் முடிவிற்கு வருதல் வேண்டும்.

அதாவது கொள்கை அடிப்படையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சி இணக்கப்பாட்டிற்கு வரமுடியுமா? என்பது கேள்விக்குரியதொன்று. இருகட்சிகளுமே ஒரே கொள்கை, கோட்பாடுகளைக் கொண்டவையாக இருப்பினும் இருகட்சிகள் இடையிலான வரலாற்றுப்பகை உணர்வில் இருந்து விடுபட்டு இத்தகைய உடன்பாட்டிற்கு வருதல் சாத்தியமாகுமா? என்பது.

இரண்டாவது சனாதிபதி சந்திரிகா குமரதுங்கவுடன் எவரும் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலோ அன்றிப் புரிந்துணர்வின் அடிப்படையிலோ இணக்கப்பாடு ஒன்றிற்கு வர முடியுமா? என்பது. ஏனெனில் சந்திரிகா நேரம் ஒன்று பேசுபவர். கூறியதைக் கூறவில்லை என்றும், கூறாதவற்றைக் கூறியதாகவும் வாதிடக் கூடியவர். இதனை அவர் தனது தனிப்பட்ட இயல்பாகவே வளர்த்துக் கொண்டவர். இதனை உள்நாட்டினர் மட்டுமல்ல வெளிநாட்டவரும் புரிந்துகொள்ளும் வகையில் பலதடவை நடந்தும் காட்டியவர்.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகாவுடன் கனவான்கள் உடன்பாடு போன்றவற்றின் அடிப்படையில் செயற்படமுடியுமா என்பது சந்தேகமே. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டின் பிரச்சினை எதுவாகிலும் அது பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்பவர் இல்லை. அவரின் குறிக்கோள் ஆட்சி அதிகாரத்தில் தனது கட்சியும், தானும் நீடித்தல் வேண்டும் என்பதே. இதற்காக அவர் எதையும் செய்வார். அவர் ஐந்து வருடமென்ன பத்து வருடங்கள் கூடத்தேர்தலை நடத்தாமல் விடவும் தயாராகக் கூடியவர். தேவை ஏற்படின் யுத்தத்தையும் ஆரம்பிப்பார். அவருக்கு சுனாமி அனர்த்தம் என்றால் என்ன? யுத்தம் என்றால் என்ன? எல்லாமே அவர் பதவியில் நீடிப்பதற்காகப் பயன்படுத்தத்தக்கவையே.

# சுனாமி நிவாரணம் தொடர்பான செயல்திட்டங்கள் சமாதான முயற்சிகளுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும்

### தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச சமூகம் சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள் சம்பந்தமாக மக்கள் மத்தியில் செயற்படுத்தப்படுகின்ற திட்டங்கள் யாவும் சமாதான முயற்சிகளுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். அவ்விதமான முயற்சிகள் மூலம் சமாதான நடவடிக்கைகள் பலப்படுத்தப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடனான கூட்டமைப்பின் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின்போது சுனாமி அனர்த்தத்தினால் அம்பாறை, மட்டக் களப்பு, திருகோணமலை முல் லைத் தீவு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் எமது மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு விதமான கஷ்டங்கள் விபரங்களைத் தெளிவாக ஆராய்ந்தோம்.

விடுதலைப்புலிகளால் இந்த விடயங்கள் தொடர்பாக இதுவரை சேகரித்த புள்ளி விபரங்களின்படி உடனடியாகவும், இடைக்காலத்திலும் நீண்ட காலத்திலும் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் பலவற்றை எமக்குத் தந்துள்ளனர். அது பற்றி நாங்கள் ஆராய்ந்தோம். அது பற்றி அவர்களுடன் கலந்தாலோசித்தோம்.

அடுத்து இந்த சுனாமி அனர்த்தத்தின்போது ஏற்பட்ட பல்வேறு விதமான துன்பங்கள், பாதிப்புக்களை எமது மக்கள் கையாளுவதற்கு வடகிழக்கில் ஒரு அமைப்பு ஏற்பட வேண்டும் என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் அத்தியாவசியத்தை எமது உறுப்பினர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

விசேடமாக சர்வதேச சமூகத்தால் வழங்கப்படுகின்ற உதவிகளைப் பொறுத்த மட்டில் அது பாரபட்சமற்ற முறையில் எமது மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளின் அடிப்படையில் அவர்களுக்கு வந்தடைய வேண்டும். அதனைப் பெறுவதற்கு நாங்கள் சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

கடந்த இரண்டு வாரங்களாக நாங்கள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இது தொடர்பாக கூடுதலான கவனத்தைச் செலுத்தியுள்ளோம். அதே விதமான செயற்பாடுகள் தொடர வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஒரு அமைப்பு நிறுவப்படும் வரையில் சர்வதேச சமூகத்தால் வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அத் திட்டங்களிற்கு என ஒதுக்கப்பட வேண்டும். அல்லது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதாவது வடக்குக் கிழக்கிற்கு வரவேண்டிய நிதி அரசாங்கத்தைச் சென்றடைந்து அரசாங்கம் எடுக்கும் முடிவின்படி அது எம்மை சேருவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறான ஒரு செயற்பாடு நடைபெறுமாயின் அரசாங்கம் பாரபட்சம் அற்ற முறையில் செயற்படுகின்றது என்பதை எவரும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது. இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாங்கள் தொடர்ந்தும் எம்மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவோம்.

அதே நேரத்தில் சமாதான முயற்சிகளை முற்றாக முடக்கக் கூடிய நிலையில் அல்லது அவர்கள் மறைக்கக் கூடிய நிலைக்கும் நாங்கள் விட முடியாது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது.

இன்றைக்கு சர்வதேச சமூகம் கூட சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள் சம்பந்தமாக மக்கள் மத்தியில் செயற்படுத்தப்படுகின்ற போது அவ் விதமான திட்டங்கள் சமாதான முயற்சிகளுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். அவ் விதமான முயற்சி மூலமாக சமாதான நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை அவர்கள் முன் வைத்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆனபடியால் சமாதான முயற்சிகளை ஒரு புறம் தள்ளி விடாமல் அதற்கும் நாங்கள் தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக நாங்கள் செயற்படுவதாகவும் முடிவுகள் எடுத்துள்ளோம்.

அம்பாறை மாவட்டத்திலும், திருமலை மாவட்டத்திலும் விசேடமாக எமது யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவதாக முடிவெடுக்கப் பட்டது. அத்துடன் திருகோணமலையில் எமது தலைமை அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு முடிவு எடுக்கப பட்டது.

***இந்த விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு எவ்வாறு உங்களுடைய தகவல்களை தெரிவிக்கப்போகின்றீர்கள்?***

இது சம்பந்தமாக பாராளுமன்றம் எதிர்வரும் 8 ஆம் திகதி கூடுகின்ற போது நாங்கள் இந்த விடயங்களைப்பகிரங்கப்படுத்துவோம். ஆனால் அதற்கிடையில் நாங்கள் சர்வதேச சமூகத்தைச் சந்தித்து இந்த விடயங்களை அவர்களுக்கு விளங்கப்படுத்துவதன் ஊடாகவும் எமது அறிக்கைகளின் மூலமாகவும் உங்களால் பகிரங்கப் படுத்தப்படுகின்ற செய்திகளின் மூலமாகவும் இந்த விடயங்கள் யாவும் அரசாங்கத்தைச் சென்றடையும் என்பது எவ்விதமான சந்தேகத்திற்கும் இடமில்லை.

* ***அடுத்து நேரடித் தொடர்புகள் எதுவும் ஏற்படுத்தமாட்டீர்களா?***

நாங்கள் நேரடித் தொடர்புகள் எதுவும் கொள்ள வேண்டிய தேவை இல்லை என்று நினைக்கின்றேன். ஏனெனில் தற்போது அரசாங்கத்துடனான கூட்டணியில் நாங்கள் பங்குபற்றிக்கொள்வதில்லை. அத்துடன் அரசாங்கத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் தற்போதைக்கு இல்லை. ஆனால் அரசாங்கம் இன்றைக்கு ஏற்படுத்தியுள்ள அமைப்புகளுக்கு ஊடாக செயற்படக்கூடிய சூழ்நிலை தற்போதைக்கு இல்லை. அதை நாங்கள் தெளிவாகக் கூறி வைக்க விரும்புகின்றோம். (சோ,கு)

## ருக்மன் சேனாநாயக்கவுக்கு ஆளும் கட்சி வலைவீச்சு!

அரசாங்கத்தில் இணையுமாறு எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினரான ருக்மன் சேனாநாயக்கவுக்கு அமைச்சர் சரத் அமுனுகம அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் இணைந்தால் முக்கிய அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படும் என்ற உறுதி மொழி குறிப்பிட்ட எதிர்க்கட்சி உறுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் தரப்பில் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் அரசாங்க அமைச்சரால் அழைக்கப்பட்ட எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர் இந்த விடயத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன

(32)

## அல்யசீராசெய்தியாளர் வன்னிக்கு வருகை

அல்யசீரா தொலைக்காட்சி நிறுவன செய்தியாளர்கள் இன்று வன்னிக்கு வருகின்றனர். இவர்கள் இங்கு சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப்பார் வையிடவுள்ளதுடன் விடுதலைப்புலிகளையும் சந்திக்கவுள்ளனர்.

அல்யசீரா வளைகுடாவில் பிரபல்யமான செய்தி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று பாதாள உலகக் குழுவினர் பொலிசாரால் சுட்டுக்கொலை

நிட்டம்புவ தங்கொல பிரதேசத்தில் வைத்து மூன்று பாதாள உலகக் குழுவினர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே பொலிசாரால் கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட மூவரும் தாம் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதாகத் தெரிவித்த இடம ஒன்றுக்குப் பொலிசாரை அழைத்துச் சென்று அங்கு பொலிசார் மீது கைக்குண்டு வீச்சு நடத்தியதாகவும் இதன்போதே தாம் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர். மொகமட் நியாஸ், ஐயுப் கான் , மெக்டொனலட் பெரெஸ் எனப் படும் மொமட் நைபர் ஆகியோரே சுட்டுக்கொல்லப் பட்டதாக பொலிசார் தெரிவித் துள்ளனர். (32)

# நோர்வே அமைச்சர்கள்
# சனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை இலங்கையை வந்தடைந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சனும் அவரது குழுவினரும் நேற்று சனாதிபதி சந்திரிகாவை சனாதிபதி மாளிகையில் சந்தித்து உரையாடிய போதே இலங்கைக்குத் தொடர்ந்து நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையை நோர்வே மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நேற்று இச்சந்திப்பில் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கில்டி எவ் ஜோன்சன், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் மற்றும் பல நோர்வே அரச அதிகாரிகள் ஆகியோரும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், சனாதிபதியின் செயலாளர் கருணாரட்ன, சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மற்றும் பாலிகாதர புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜயசிங்க திலக்ரணவிராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சகல அரசியல் கட்சிகளுடனும் விடுதலைப்புலிகளுடனும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் என்பனவற்றுடன் கலந்தாலோசித்ததன் அடிப்படையில் மிகக் குறுகிய காலத்தினுள் புனர் நிர்மாணப் பணிக்கான பூர்த்தியாக்கும் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய திட்டத்தையும் விளக்கியுள்ளார். மனோதித்தா வெல, டாக்டர் தாரா டீமெல் ஆகியோரினால் பாதிக்கப்பட்ட மீட்பு நிவாரணத் திட்டங்கள் அமுலாக்கல், புள்ளி விபரவியல் திட்டமும் அவர்களிற்கு காட்டப்பட்டுள்ளது. கில்டி எவ் ஜோன்சன் பழைய நிலைமைக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளுக்கு தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார். அவர் சிறிலங்காவின் தேசிய திட்டத்திற்கு பொருத்தமான உதவி வழங்கும் நாடுகளின் இணைப்பின் தேவை பற்றியும் வலியுறுத்திக் கூறினார்.

# உதவி நிறுவனப் பணியாளர் வாகன விபத்தில் பலி

மட்டக்களப்பு - பொலநறுவை வீதி நாவலடியில் நேற்றுக் காலை இடம் பெற்ற வாகன விபத்தில் கெயர் நிறுவனப் பணியாளரொருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து கெயர் நிறுவனப் பணியாளர்கள் பயணம் செய்த இரண்டு வாகனங்கள் எதிரே வந்த பாரஊர்தியொன்றுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் மேலும் 11 பேர் காயமடைந்துள்ளார்கள். இவர்களில் மூவர் உலங்குவானூர்தி மூலம் கொண்டு செல்லப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

## -நலன்புரிநிலையத்தில்-
# கடமையில் நின்றவர் மீது
# விசேட அதிரடிப்படை தாக்குதல்

(அம்பாறை)

திருக்கோவில் மத்திய மகாவித்தியாலய நலன் புரிநிலையத்தில் கடமையிலிருந்த ஒருவரை விசேட அதிரடிப்படையினர் தாக்கியுள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனமொன்று சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க முற்பட்ட வேளை பிரதேச செயலாரினால் கைச்சாத்திடப்பட்ட அடையாள அட்டையுடன் திரைமுக்தி பிரபாகரன் (வயது-35) என்பவர் அங்கு நின்றுள்ளார்.

கடமையிலிருந்த விசேட அதிரடிப்படையினர் அவரைத் தனியாக அழைத்து சென்று பூட்டியிருந்த அறையினுள் வைத்து அடித்திருக்கின்றனர். இது தொடர்பாக அங்கிருந்த ஏனைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட வேளை எவ்வித அக்கறையும் எடுக்காதுள்ளனா.

# உப்பூறல், சீனன்வெளிகிராமங்களுக்கு
# அரச நிவாரணம் கிடைக்கவில்லை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம்-செருவில சிங்கள பிரதேச செயலர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள உப்பூறல் மற்றும் சீனன்வெளி ஆகிய தமிழ்க் கிராமங்களில் வாழும் சுமார் 400 குடும்பங்கள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தும் அம்மக்களுக்கு டிசம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை அரச நிவாரணமோ, உலக உணவு செயற்றிட்டம் (WFP) வழங்கும் நிவாரணமோ கிடைக்கவில்லை என்று தொண்டர் அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியினுள் இருக்கும் இக்கிராமங்களை சேருவில் பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள் இன்னும் போய்ப்பார்க்கவில்லை என்று அப்பிரதேச மக்கள் குறைப்படுகின்றனர். தமிழரல்லாதவர்களால் நிர்வகிக்கப்படும் பிரதேச செயலகம் திட்டமிட்டு தங்கள் கிராமங்களைப்புறக்கணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக அக்கிராமவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுனாமி ஏற்பட்ட நாள் தொடக்கம் விடுதலைப்புலிகள் தரப்பினரும் தமிழர்புனர்வாழ்வுக் கழகமும் மாத்திரமே சீனன்வெளி, உப்பூறல் கிராமங்களில் வாழும் மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (25)

## சிறிலங்கா..

கியமாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களுக்கான உடனடி மனிதாபிமான நடவடிக்கைகள், நிவாரணப்பணிகள், எதிர்கால வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களோடு நாங்கள் கலந்துரையாடியுள்ளோம். இவ்விடயத்தில் எங்களது தலைமைப்பீடம் எடுத்திருக்கின்ற நிலைப்பாடு சம்பந்தமாகவும் சர்வதேச சமூகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் ஆராய்ந்துள்ளோம். இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான மறுவாழ்வுப் பணிகள் சம்பந்தமான விடயங்கள் குறித்து முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

*** இந்தியாவில் இருந்து கிடைக்கின்ற உதவிகள் தொடர்பாக உங்களது நிலைப்பாடு?**

எங்களைப் பொறுத்தவரையில் பொதுவாகவே அனைத்து உதவிகளும் சரியாகப் பகிரப்பட வேண்டும். சர்வதேச சமூகத்தின் உதவிகள் அனைத்தும் பாதிப்பின் அடிப்படையில் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இலங்கை அரசாங்கத்திற்கூடாக சரியாகப் பகிரப்படும் என்பது சந்தேகமானது. தமிழ் மக்களுக்கும் இந்தச் சந்தேகங்கள் பெரியளவில் இருக்கின்றது. ஏனெனில் இலங்கை அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு அவர்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கின்றோம். எனவே நாங்கள் சர்வதேச சமூகத்திடம் கேட்டுக் கொள்வதானது பாதிப்பின் அடிப்படையில் உதவிகள் பகிரப்பட வேண்டும். வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகப்பகுதியின் கரையோரப்பகுதி தான் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அந்த அடிப்படையில் இந்த உதவிகள் முழு அளவில் வந்து சேர்வதற்கு சர்வதேச சமூகம் ஒரு கட்டமைப்பினை நிறுவி இங்கு அந்த உதவிகளை திருப்ப வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

*** நடைபெறவுள்ள நோர்வேத் தரப்பினருடனான சந்திப்பின் மூலம் ஒரு திருப்பம் ஏற்படும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?**

எங்களைப் பொறுத்த வரையில் இந்தப் பயணம் முழுக்க முழுக்கவே ஒரு மனிதாபிமான நோக்குடனான பயணம். பாதிக்கப்பட்ட மக்கள், பாதிக்கப்பட்ட தேசம் என்ற வகையில் அதனைப் பார்வையிடுவதும் எங்களுடைய மக்களுக்கான உதவிகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பது சம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்கான கூட்டம். உயர்மட்டப் பிரதிநிதிகளுடைய வருகை என்ற அடிப்படையில் எங்களுடைய தேசியத் தலைவர் அவர்களையும், பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளார்கள். அந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாகத் தான் இது அமையப் போகின்றது.

எனவே திருப்பங்கள் வருமா, வராதா என்பது குறித்து சந்திப்பின் பின்னர்தான் கருத்துக் கூற முடியும்

***சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் நிலைமைகள் தற்போது எப்படி உள்ளது?**

வடக்குக் கிழக்கு பாதிக்கப்பட்ட மக்களை பொறுத்தவரை உடனடி மனிதாபிமான நிவாரணப் பணிகள் ஓரளவு உள்ளூர் மக்களின் ஆதரவுடனும் சர்வதேசத்தின் புலம் பெயர்ந்திருக்கின்ற மக்களின் ஆதரவும் சர்வதேச நிறுவனங்களின் உதவியோடும் எங்களது கட்டமைப்புக்களும் இணைந்து இந்தப் பணியினை ஓரளவு நாங்கள் திருப்திகரமாக முன்னெடுத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய பாரிய வேலைத் திட்டங்களுக்குத்தான் நாங்கள் சர்வதேச சமூகத்திடம் உதவி கோரியுள்ளோம் .

*** தற்போது அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கின்ற உதவிகள் பற்றி?**

அரசாங்கத்திடமிருந்து ஓரளவு உதவிகள் அரச அதிபர் மூலமாக தற்போது கிடைக்கப் பெறுகின்றது. ஆனால் அவை முழு அளவில் திருப்தி அளிக்கக் கூடிய வகையில் இல்லை என்பதுதான் இன்றைய நிலைமை

ஏனெனில் அரசிற்கு அவர்கள் அனுப்புகின்ற உதவிகள் சர்வதேச அளவில் அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற உதவிகள் தெற்கே அனுப்பப்படுகின்ற அளவிற்கு இங்கே அனுப்பப்படவில்லை என்பதுதான் இன்று எழுந்துள்ள கேள்வியாகவுள்ளது.

*** சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 15 நகரங்கள் புனரமைக்கப்படுவதாக செய்திகள் வெளி வருகின்றன. இந்நிலையில் தமிழர் தாயகப் பகுதியில் எந்தவொரு பகுதியும் தெரிவு செய்யப்படவில்லை இது குறித்து?**

தமிழர் தாயகப் பகுதியை ஏற்கனவே அரசு புறக்கணித்துத் தான் வருகின்றது பாகுபாடு காட்டித்தான் வருகின்றது. அந்த அடிப்படையில் அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இதுவும் இருக்குமென நம்புகின்றேன் என்றார்.

மேற்படி சந்திப்பு நேற்று 2.15 மணி முதல் பிற்பகல் 4.30 வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் திட்ட மிடல் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களும், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வெ.பாலகுமார் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சிறான் திட்டப் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் ஆகியோரும், தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அனைத்து வடகிழக்கு தமிழ்த்தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ.கு)

## சுனாமி...

இணையத்தளத்தில் கூட இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. இது உண்மையில் மக்கள் மத்தியில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கக் கூடிய நிலையை உருவாக்கும். எனவே குறிப்பாக அரசாங்கம் தமது தகவல்களை வெளியிடவேண்டும். அவ்வாறு நிதி தொடர்பான தகவல்கள் வெளியிடப்படும்போது நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும் சனாதிபதி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்தப் பணிகள் உரிய முறையில் செய்யப்படுவதற்கு இந்த தகவல் முக்கியமாகும். (32)

## தாயகம்...

போதைய நிலை என்பன தொடர்பாகவும் தீவிரமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், இன்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையிலான நோர்வேக் குழுவினருடனான சந்திப்பின்போது பேசப்பட வேண்டிய விடயங்கள் என்பன குறித்தும் பரிசீலிக்கப்பட்டதாகவும் அறிய வருகின்றது.

இதேவேளை, வன்னி வருகை தந்துள்ள அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சுமார் இரு வார காலங்கள் இங்கு தங்கியிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பொதுவான..

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

**உங்களது வன்னி விஜயத்தின் நோக்கம் குறித்து தெரிவிக்க முடியுமா?**

எமது தலைவர் பிரபாகரன் அவர்கள் நோர்வேயின் பிரதிநிதிகள் குழுவுடன் நடத்தவுள்ள சந்திப்பில் கலந்துகொள்ள வந்துள்ளேன். எனவே, நான் மேலதிக விளக்கத்தை சந்திப்பின் முன் வெளியிட முடியாது. சந்திப்பின் பின்னர் சந்திப்பின் முன்னேற்றம் பற்றி நாம் திட்டவட்டமாக விளக்கமளிப்போம்.

*** உங்களிடம் ஏதாவது விசேட நிகழ்ச்சி நிரல் உண்டா?**

இல்லை. அவர்கள் விசேடமாக சுனாமி அழிவைப் பார்வையிடவும், மதிப்பீடு செய்யவும் வருகிறார்கள். அத்துடன் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராய்வர். நேற்று அவர்கள் சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தார்கள். அவர்கள் ஏதாவது ஆக்கபூர்வமான யோசனையைக் கொண்டு வருவார்களோ எமக்குத் தெரியாது. தமிழர்களின் நிலைமை நெருக்கடி மிக்கது. மிகப் பெரிய சர்வதேச உதவி இவ்வனர்த்தத்திற்குக் கிடைத்தது. ஆனால், சமமான விநியோகம் மேற் கொள்ளப்படவில்லை. ஒரு பொதுவான கட்டமைப்பினூடாக இவ்விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என நோர்வே பிரதிநிதிகளுடன் நாம் கலந்து பேசவேண்டியுள்ளது என்றார்.

அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அவர்களின் துணைவியார் திருமதி. அடேல் பாலசிங்கம் அவர்களும் நேற்று கிளிநொச்சி வந்து சேர்ந்தனர்.

சிறிலங்கா வான் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் நேற்று பிற்பகல் 1.50 மணிக்கு கிளிநொச்சியை வந்தடைந்த அன்ரன் பாலசிங்கம் அவர்களையும், துணைவியாரையும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களும், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் மற்றும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் வரவேற்றனர். (சோ,கு)

நாளை பரீட்சை
இன்றே
இலவச
அனுமதிகளை
பெற்றிடுங்கள்

Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
23-01-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
கணினியியல் கல்லூரி
(Affiliated to Asian)
யாழ்சாலை, கிளிநொச்சி.
C-1114

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.